# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2257 - 2021 දෙසැම්බර් මස 03 වැනි සිකුරාදා - 2021.12.03

*2257 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1652* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1662* |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1649-B 82293-5,403 (2021/ 11)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;

II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;

III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;

IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;

V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;

VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;

VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;

VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்குகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:

(i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;

(ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;

(III) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.

(iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;

(v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;

(vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;

(vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;

(vIII) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;

(ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;

(x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;

(xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;

(xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;

(xIII) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பல்கலைக்கழக வைத்தியசாலை

## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவமனையில் பின்வரும் பதவிகளுக்கு (நிரந்தர அடிப்படை) தகுதியான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **வைத்திய நிபுணர்கள்**

1. வைத்திய நிபுணர் உடலியல் பொது மருத்துவம்
2. வைத்திய நிபுணர் ஆலோசணை மருத்துவர் வெளி நோயாளர் பிரிவு
3. வைத்திய நிபுணர் அவசர மருத்துவ சிகிச்சை
4. வைத்திய நிபுணர் அதிதீவிர சிகிச்சை
5. வைத்திய நிபுணர் குழந்தைகள் இருதயம்
6. இரசாயன நோயியல் நிபுணர்
7. சிறுநீரகவியல் நிபுணர்
8. குடல் இரைப்பை நோயியல் நிபுணர்
9. நரம்பியல் நோய் நிபுணர்
10. வஸ்குயூலர் சத்திரசிகிச்சை நிபுணர்
11. சத்திர சிகச்சை நிபுணர் (சிறுநீரகம், ஈரல், பித்தகுழாய் மாற்றக் கூடிய இயலுமை)
12. கதிரியக்க சிகிச்சை நிபுணர்
13. வைத்திய நிபுணர் உணர்விழப்பு (இருதய உணர்விழப்பில் விஷேட திறமை)
14. இருதய சத்திரசிகிச்சை நிபுணர்
15. வைத்திய நிபுணர் வாய் மற்றும் முகம் தாடை சத்திர சிகிச்சை
16. பல் சீரமைப்பியல் நிபுணர்

**தகைமைகள்**

I. 2018 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டத்தின் கீழ் இலங்கை மருத்துவ சபையில் பதிவுசெய்யப்பட்ட/பதிவுசெய்யப்படக்கூடிய வைத்திய அதிகாரிகள் மற்றும் பல் வைத்தியர்கள்.

அல்லது

II. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவுடைய மருத்துவ அதிகாரிகள்/ பல் மருத்துவர்கள்

அல்லது

III. இலங்கை, கொழும்பு பல்கலைக்கழக மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவக சபையினால் சான்றிதழ் அழிக்கப்பட்டதாக குறித்த துறையில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவத்தில் டாக்டர் பட்டம்/சத்திரசிகிச்சையில் டாக்டர் பட்டம் பெற்றிருத்தல் (இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.10.11 ஆந் திகதிய 1883/17 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் இணைப்பு II இல் குறிப்பிடப்பட்ட)

அத்துடன்

IV. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்

**சம்பள அளவுத்திட்டம்.-**

MC 1-2- (ரூபா 91,645 -12 × 2,700 - ரூபா 124,045)
*தரம் I வைத்திய நிபுணர்கள் MC 1-2 இன் முதலாம் படி நிலையில் வைக்கப்படுவர்.

2. **வைத்திய அதிகாரி - தரம் I**

**தகைமைகள்:**

I. வைத்திய அதிகாரியாக செயற்படுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவை உடைய மருத்துவ அதிகாரி

அத்துடன்

II. சுகாதார அமைச்சின் கீழுள்ள நிறுவனமொன்றில் அல்லது இலங்கை சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையின் "தனியார் வைத்தியசாலைகள், தாதியர் இல்லங்கள், மற்றும் மகப்பேற்று இல்லங்கள்" என்ற வகுதிக்குள் அடங்கும் பதிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளில் தரம் II மருத்துவ அதிகாரியாக குறைந்தது ஆறு (06) வருடகால அனுபவம்

அத்துடன்

III. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.10.11 ஆந் திகதிய 1883/17 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் இணைப்பு II இல் குறிப்பிடப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட முதுகலைப்பட்ட படிப்புத் தகைமை

அத்துடன்

IV. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்

**சம்பள அளவுத்திட்டம்:**

MO 1-1 (ரூபா 58,675 - 3 × 1,375 - 7 × 1385 - 2 ×1,910 - 10 × 2,270 - ரூபா 99,015)

* தரம் I வைத்திய நிபுணர்கள் MO 1-1 ரூபா 78,585.00 இன் 14 ஆம் படி நிலையில் வைக்கப்படுவர்.

3. **வைத்திய அதிகாரி - தரம் II**

**தகைமைகள்:**

I. மருத்துவ அதிகாரியாக செயற்படுவதன் பொருட்டு இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவுடைய மருத்துவ அதிகாரியாக இருத்தல்

அத்துடன்

II. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்

**சம்பள அளவுத்திட்டம் :**

MO 1-1 (ரூபா 58,675 - 3 × 1,375 - 7×1385 - 2 × 1,910 - 10 × 2,270 - ரூபா 99,015)

* தரம் II வைத்திய அதிகாரிகள் MO 1-1 ரூபா 64,185.00 இன் 5 ஆம் படி நிலையில் வைக்கப்படுவர்.

4. **வைத்திய அதிகாரி - ஆரம்பத் தரம்**

**தகைமைகள்:**

I. மருத்துவ அதிகாரியாக செயற்படுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவுடைய மருத்துவ அதிகாரி

அத்துடன்

II. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்

**சம்பள அளவுத்திட்டம்**:

MO 1-1 (ரூபா 58,675 - 3 × 1,375 – 7×1385 - 2 × 1,910 - 10 × 2,270 – ரூபா 99,015)
*ஆரம்பத்தர வைத்திய அதிகாரிகள் MO 1-1 ரூபா 60,050.00 இன் 2 ஆம் படி நிலையில் வைக்கப்படுவர்.

5. **செவிலி - தாதிய உத்தியோகத்தர் விசேட தரம்**

**தகைமைகள்**:

I. விசேட தரமுடைய தாதிய உத்தியோகத்தர்களாக இருத்தல் வேண்டும்.

அத்துடன்

II. வார்ட் மேற்பார்வையும் முகாமைத்துவமும்/போதித்தலும் மேற்பர்வையும்/பொதுச் சுகாதார தாதியல் மற்றும் குடும்பநலம்/உளச்சிகிச்சை அடங்கலாக தாதியல் கற்கைகளுக்கான தேசிய நிறுவகத்தினால்/அடிப்படை தாதியல் பின்படிப்புப் பாடசாலையால் நடாத்தப்படும் 1 1/2 வரு டிப்ளோமாவைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அத்துடன் தரம் I தாதிய உத்தியோகத்தராக (வைத்தியாசாலை சேவை, கல்வி, பொதுச் சுகாதாரம்) 05 வருட காலம் சேவையாற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

III. 3 ஆவது வினைத்திறன்காண் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

அத்துடன்

IV. அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் அத்துடன் தொடர்ச்சியான 05 வருட அண்மித்த காலப்பகுதியில் திருப்திகரமாக சேவையாற்றிருத்தல்

அத்துடன்

V. அங்கீகரிக்கப்பட்ட வினையாற்றுகை நடவடிக்கை முறைக்கு ஏற்ப பதவியுயர்வுக்கு முன்னரான 05 வருட காலத்தில் திருப்திகரமாக வினையாற்றுகை செய்திருத்தல்.

**வயதெல்லை**.- 25 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**:
MT - 8 (ரூபா 50,970 - 10 × 1,385 - 8 × 1,910 - ரூபா 80,100)
* செவிலிகள் (விசேட தரம்) MT - 8 - ரூபா 55,125 இன் 4 ஆம் படிநிலையில் வைக்கப்படுவர்.

6. தாதிய சகோதரி

**தகைமைகள்**:

I. தரம் 1 இனைச் சேர்ந்த தாதிய உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

அத்துடன்

II. வார்ட் மேற்பார்வையும் முகாமைத்துவமும்/போதித்தலும் மேற்பர்வையும்/பொதுச் சுகாதார தாதியல் மற்றும் குடும்பநலம்/தாதியல் உளச்சுகாதாரம் அடங்கலாக தேசிய தாதியல் பயிற்சிப் பாடசாலையால் அல்லது பின்படிப்பு ஆரம்ப தாதியல் பயிற்சிப் பாடசாலையால் நடாத்தப்படும் 1 1/2 வருட டிப்ளோமாவைப் பூர்த்தி செய்துள்ள தாதி உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

அத்துடன்

III. 2 ஆவது வினைத்திறன்காண் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

அத்துடன்

IV. அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் அத்துடன் தொடர்ச்சியான அண்மித்த 05 வருட காலப்பகுதியில் திருப்திகரமாக சேவையாற்றியிருத்தல்.

அத்துடன்

V. அங்கீகரிக்கப்பட்ட வினையாற்றுகை நடவடிக்கை முறைக்கு ஏற்ப பதவியுயர்வுக்கு முன்னரான 05 வருடகாலத்தில் திருப்திகரமாக வினையாற்றுகை செய்திருத்தல்.

**வயதெல்லை:**

25 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்.-**

MT - 7 (ரூபா 33,295 - 10 × 445- 11 × 660 - 10 × 730- 5× 750- ரூபா 59,805)

* செவிலிகள் (விசேட தரம்) MT - 7 - ரூபா 45,735.00 இன் 23 ஆம் படிநிலையில் வைக்கப்படுவர்.

7. **தாதிய உத்தியோகத்தர்**

**தகைமைகள்:**

I. தாதியல் BSc பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து அல்லது சுகாதார அமைச்சிலிருந்து தாதியல் டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

II. க. பொ. த. (உ./த.) உயிரியல் அல்லது கணிதம் அல்லது விவசாய பாடத்துறையில் (பொது அறிவு பாடம் தவிர்ந்த) அனைத்துப் பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தி எய்தியிருத்தல் அல்லது குறிப்பிட்ட துறைகளில் பழைய பாடத்திட்டத்தில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தி எய்தியிருத்தல்.

அத்துடன்

III. க. பொ. த. (சா./த.) பரீட்சையில் இரு அமர்வுக்கு மேற்படாமல் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சிங்களம்/தமிழ் மொழி பாடங்களில் நான்கு (04) திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

**வயதெல்லை:**
22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**

MT - 7 (ரூபா 33,295 -10 × 445 - 11 × 660 - 10 × 730 - 5 × 750 - ரூபா 59,805 )
* தாதி உத்தியோகத்தர் MT - 7, 1 ஆம் படி நிலையில் வைக்கப்படுவர்.

**பொது நிபந்தனைகள்:**

1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
2. பதவிக்குரிய கடமைகளை சிறப்பாக செய்வதற்கு போதுமான உடல் மற்றும் மனத்தகுதியுடன் இருத்தல் வேண்டும். மேலும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவமனையிலோ அல்லது பல்கலைக்கழகத்தின் வேறு எந்த இடத்திலோ சேவை செய்ய இயலுமாக இருத்தல் வேண்டும்;
3. சிறந்த தார்மீக பண்புடையவராக இருத்தல் வேண்டும்;
4. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பம் முடிவடையும் இறுதித்திகதிக்கு முன் தேவையான அனைத்துத் தகுதிகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5. இந்தப் பதவிகள் நிரந்தரமானவை என்பதுடன் ஆரம்ப தர மருத்துவ துறை மற்றும் தாதிய அதிகாரி தரம் III ஆகியன 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும்.ஏனைய விசேட தரப்பதவிகள் மற்றும் அரசாங்க சேவையிலுள்ள மருத்துவ நிபுணர், வைத்திய அதிகாரி தரம் I, மருத்துவ அதிகாரி தரம் II ஆகியோர் ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும்.

6. ஊழியரின் பங்களிப்பானது ஊழியர் வருங்கால வைப்பு நிதிக்கு (EPF) 10% உம் பல்கலைக்கழகத்திற்கு (EPF) 15% உம் ஊழியர் அறக்கட்டளை நிதியத்திற்கு (ETF) 3% முமாக அமையும்.(பாராளுமன்றத்தால் அறிமுகப்படுத்தப்படும் திருத்தச் சட்டங்களுக்கு உட்பட்டது.)

7. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களுடன் உரிய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடனும் 17.12.2021 க்கு முன் "நிறைவேற்று அதிகார பணிப்பாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவமனை, வெரஹெர" எனும் முகவரிக்கு அல்லது edassistant_uh@kdu.ac.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.

8. விண்ணப்பதாரர்களை பட்டியலிடும் உரிமையை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவமனை கொண்டுள்ளது.

9. முழுமையாக பூர்த்திசெய்யப்படாத அல்லது தாமதமாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட வடிவமைப்பிற்கு இணங்காத விண்ணப்பங்கள் என்பன நிராகரிக்கப்படும்.

10. விண்ணப்பங்கள் மற்றும் பிற விபரங்களை KDU இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்யலாம். (www.kdu.ac.lk).

www.kdu.ac.lk

ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வுபெற்றவர்)
டபிள்யுடபிள்யுவி ஆர்டபிள்யுபி ஆர்எஸ்பி யூஎஸ்பி
என்டிசி பிஎஸ்சீ எம்பில்
செயலாளர்
பாதுகாப்பு அமைச்சு.

12-346

---

## கலாசார அலுவல்கள் திணைக்களம்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதவி வெற்றிடங்கள் நிலவும் கீழ்க்கண்ட பதவிகளுக்கு தகுதியான இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| நிலையான புகைப்படக் கலைஞர் | 01 |
| வீடியோ கெமரா செயற்படுத்துனர் | 01 |
| ஒலி/ஒளி தொகுப்பாளர் | 01 |

02. **சேவையில் அமர்த்துதல் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

இந்த பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதியம் உரித்துடையதாகும். இப்பதவிக்குரிய ஓய்வூதிய திட்டம் தொடர்பாக எதிர்காலங்களில் அரசினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களுக்கு தாங்கள் உடன்பட வேண்டும்.

சம்பளக் குறியீடு : MT 01-2016
சம்பள அளவுத்திட்டம் : ரூபா 29,840.00 - 10 × 300 - 11 × 350 - 10 × 560 - 10 × 660 - ரூபா 48,890.00

03. **தகைமைகள் :**

(I) **கல்வித் தகைமைகள்** : சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(II) **தொழிற் தகைமைகள் :**

(1) நிலையான புகைப்படவியலாளர் :- புகைப்படவியல் தொடர்பான தேசிய தொழிற்தகைமை (NVQ) மட்டம் 05 இற்கு குறையாத பாடநெறியொன்றினைக் கற்று சான்றிதழ் பெற்றிருத்தல்.

(2) வீடியோ கெமரா செயற்படுத்துனர் :- வீடியோ கெமரா தொடர்பான தேசிய தொழிற் தகைமை (NVQ) மட்டம் 05 இற்கு குறையாத பாடநெறியொன்றினைக் கற்று சான்றிதழ் பெற்றிருத்தல்.

(3) ஒலி/ஒளி தொகுப்பாளர் : ஒலி/ஒளி தொடர்பான தேசிய தொழிற்தகைமை (NVQ) மட்டம் 05 இற்கு குறையாத பாடநெறியொன்றினைக் கற்று சான்றிதழ் பெற்றிருத்தல்.

(III) **அனுபவம்** : குறித்த துறையில் பெற்றுள்ள அனுபவம் விஷேட திறமையாக கவனத்திற் கொள்ளப்படும்.

(IV) **உடற் தகைமைகள்** : சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குப் பதவிக்குரிய கடமைகளை சரிவர நிறைவேற்றுவதற்கும் போதியளவான உடல், உள தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

(V) **வேறு தகைமைகள் :**

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. நற்பண்புகளை கொண்டிருத்தல் வேண்டும்.
iii. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொடர் இல. 3 இலுள்ள எல்லா தகைமைகளையும் சகல வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

04. **வயதெல்லை**: 18 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

05. **ஆட்சேர்த்தல் முறைமை :**

I. கலாசார அலுவல்கள் பணிப்பாளரினால் நியமிக்கப்படும் தகைமைகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் அல்லது செயன்முறைப் பரீட்சையின் சிபாரிசுகளுக்கமைய ஆட்சேர்க்கப்படும். தகைமையை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையிலும் செயன்முறைப் பரீட்சையிலும் பெறும் புள்ளிகளின் மொத்த தொகையில் திறமை அடிப்படையிலும் நிலவும் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமையவும் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

* தகைமையை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சை

| பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் விடயங்கள் | அதிகூடிய புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடைய தேவையான புள்ளிகள் |
|---|---|---|
| 1. **மேலதிக கல்வித் தகைமைகள் :**<br>* க. பொத. சாதாரண தர சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகள், கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல். குறித்த பாடங்களுக்கு மேலதிகமாக சித்தியடைந்திருக்கும் பாடங்களுக்கமைய<br>1. க. பொ. த. சா. தர பாடங்களுக்காக - 10 புள்ளிகள்<br>2. க. பொ. த. உ. தர பாடங்களுக்காக - 10 புள்ளிகள் | 20 | |

| பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் விடயங்கள் | அதிகூடிய புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடைய தேவையான புள்ளிகள் |
|---|---|---|
| 2. **மேலதிக கல்வித் தகைமைகள் :**<br>* தொழில் துறைக்குரிய தேசிய தொழிற்திறமை (N.V.Q) மட்டம் அதற்கு மேலதிகமான துறைகளுக்குரிய வேறு தொழிற் சான்றிதழுக்காக<br>1. தேசிய தொழிற் திறமைச் சான்றிதழ், டிப்ளோமா போன்றன. | 25 | |
| 3. **தொழில் அனுபவங்கள் :**<br>* கேட்கப்பட்டுள்ள துறையில் பெற்றுள்ள தொழில் அனுபவத்திற்கு ஒரு வருடத்திற்கு 3 படி 10 வருடங்களுக்கு | 30 | |
| 4. **தகவல் தொழில்நுட்பம் கணிணியறிவு தொடர்பான தகைமைகள் :**<br>* தகவல் தொழில்நுட்பம் கணிணியறிவு தொடர்பாக பெற்றுள்ள சான்றிதழ் பாடநெறி, டிப்ளோமா பாடநெறி அல்லது உயர் டிப்ளோமா பாடநெறியொன்றுக்காக | 10 | |
| 5. **மொழித் தேர்ச்சி :**<br>* மொழித் தேர்ச்சி தொடர்பாக பெற்றுள்ள சான்றிதழ் பாடநெறி, டிப்ளோமா பாடநெறி அல்லது உயர் டிப்ளோமா பாடநெறிக்காக | 10 | |
| 6. **நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமைகள் :**<br>* தலைமைத்துவம் புள்ளிகள் 02<br>* தொடர்பாடல் திறன் புள்ளிகள் 02<br>* ஆளுமை புள்ளிகள் 01 | 05 | |
| மொத்தம் | 100 | |

* செயன்முறைப் பரீட்சை

1. **நிலையான புகைப்படக் கலைஞர் பதவி**

| பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் விடயங்கள் | அதிகூடிய புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|
| 1. ஒரு புகைப்படக் கருவியை கையாளுதல் மற்றும் புகைப்படம் எடுத்தல் | 60 | |
| 2. ஒளி வழங்குதல் மற்றும் நவீன தொழில்நுட்பமுறையின் பயன்பாடு | 20 | |
| 3. தெளிவாக புகைப்படம் எடுத்தல் | 20 | |
| மொத்தம் | 100 | 40% |

2. **வீடியோ கெமரா செயற்படுத்துநர்**

| பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் மாதிரி | அதிகூடிய புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|
| 1. வீடியோ கெமரா மற்றும் அதனுடன் தொடர்புடைய கருவிகள் | 30 | |
| 2. தொழிற் பதவிகளுக்கு பொருத்தமானவாறு காட்சிகளை தெரிவு செய்தல் மற்றும் தரவுகளை சேகரித்தல் | 20 | |
| 3. தொலைக்காட்சி காட்சிகளுக்கு பொருத்தமான இயல்பான ஒளியமைப்பை கையாளுதல் மற்றும் காட்சிப் பதிவு செய்தலுக்காக மின் விளக்கினை பயன்படுத்தல் | 20 | |

| பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் மாதிரி | அதிகூடிய புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|
| 4. கணினி தொழில்நுட்ப பயன்பாட்டுடன் செய்திகள் தொகுத்தல் தொடர்பான திறன் | 10 | |
| 5. இறுவெட்டு பதிவு செய்தல் தொடர்பான தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்களை கையாளுதல் தொடர்பான அறிவு | 10 | |
| 6. தொலைக்காட்சி மேடையில் படமாக்குதல் தொடர்பான சாதாரண அறிவு | 10 | |
| மொத்தம் | 100 | 40% |

3. **ஒலி/ஒளி தொகுப்பாளர்**

| பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் விடயங்கள் | அதிகூடிய புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|
| 1. ஒலி/ ஒளி தொகுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்களை இயக்குதல் | 40 | |
| 2. கணினி தொழில்நுட்பம் பயன்பாட்டினால் தொகுத்தல் தொடர்பான திறன் | 40 | |
| 3. தொகுத்தல் மேடையில் தொகுத்தல் தொடர்பான சாதாரண அறிவு | 20 | |
| மொத்தம் | 100 | 40% |

06. விண்ணப்பங்கள் கீழ்க்காணப்படும் மாதிரிப்படிவத்திற்கமைய A4 (8.27 × 11.69 ) அளவிலான தாளில் தயாரித்து 2021.12.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு “பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம், 08 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் உள்ளவாறு அமையாத அல்லது பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். குறித்த விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தங்களிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். (விண்ணப்பப்படிவங்கள் அனுப்பி வைக்கப்படும் கடிதத உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்)

கலாசார அலுவல்கள் பணிப்பாளர்.

கலாசார அலுவல்கள் திணைக்களம்,
08 ஆம் மாடி,
செத்சிறிபாய,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்காக

**கலாசார அலுவல்கள் திணைக்களம்**

.................................. பதவிக்கான விண்ணப்பம்

1. முதல் எழுத்துக்களுடன் பெயர் : ......................................

2. முழுப் பெயர் : ............................

3. பிறந்த திகதி : ..................................

4. வயது (2021.12.31 ஆந் திகதியன்று) : வருடங்கள் : .................. மாதங்கள் :................. நாட்கள் :.............

5. தேசிய ஆளடையாள அட்டை இல. : .....................

6. பால் : (ஆண்/பெண்) : ................

7. முகவரி : ..............................

8. தொலைபேசி இலக்கம் :..............................

9. கல்வித் தகைமைகள் : ..............................

(i) க.பொ.த. (சா.தரம்)

வருடம் பரீட்சை எண்

| பாடங்கள் | பெற்றுள்ள சித்தி | பாடங்கள் | பெற்றுள்ள சித்தி |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

(ii) க.பொ.த. (உ.தரம்)

வருடம் சுட்டெண்

| பாடம் | பெற்ற சித்தி |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

10. தொழில் தகைமைகள் :...........................................................................

11. அனுபவம் :........................................................................

இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள சகல விபரங்களும் நான் அறிந்த வகையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இங்கு என்னால் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் விபரங்கள் தெரிவுசெய்யப்பட முன்னர் உண்மையற்றதாகவும் பிழையானதாகவும் தெரியவரின் நான் பொருத்தமற்றவராவேன் என்பதையும், நியமிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பாக தெரியவரின் நியமனம் நிராகரிக்கப்படக்கூடியதெனவும் நான் அறிவேன்.

.............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : .................................

12-350

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் கோரப்படும் இறுதி திகதியினை திருத்தம் செய்தல் – கேகாலை மாவட்டம்

இலக்கம் 2243 மற்றும் 2021.08.27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருந்த முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிகளுக்குரிய விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி 2021.12.15 ஆந் திகதி வரை நீடிக்கப்படுவதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

2. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மாத்திரம் திருத்தப்படல் வேண்டும் என்பதுடன் அந்த விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்படும் ஏனைய விடயங்கள் அனைத்தும் அவ்வாறே வலுவிலிருக்கும் என தயவுடன் கருத்திற் கொள்ளவும்.

டப்ளியூ. எம். எம். பி. வீரசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,

12-374

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் கோரப்படும் இறுதி திகதியினை திருத்தம் செய்தல் - கேகாலை மாவட்டம்

இலக்கம் 2243 மற்றும் 2021.08.27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருந்த விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்குரிய விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி 2021.12.15 ஆந் திகதி வரை நீடிக்கப்படுவதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

2. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மாத்திரம் திருத்தப்படல் வேண்டும் என்பதுடன் அந்த விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்படும் ஏனைய விடயங்கள் அனைத்தும் அவ்வாறே வலுவிலிருக்கும் என தயவுடன் கருத்திற் கொள்ளவும்.

டப்ளியூ. எம். எம். பி. வீரசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,

12-375

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் (தமிழ் மொழி மூலம்) பதவிக்காக விண்ணப்பம் கோரப்படும் இறுதி திகதியினை திருத்தம் செய்தல் - பதுளை மாவட்டம்

இலக்கம் 2243 மற்றும் 2021.08.27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருந்த விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் (தமிழ் மொழி மூலம்) பதவிகளுக்குரிய விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி 2021.12.15 ஆந் திகதி வரை நீடிக்கப்படுவதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

2. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மாத்திரம் திருத்தப்படல் வேண்டும் என்பதுடன் அந்த விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்படும் ஏனைய விடயங்கள் அனைத்தும் அவ்வாறே வலுவிலிருக்கும் என தயவுடன் கருத்திற் கொள்ளவும்.

டப்ளியூ. எம். எம். பி. வீரசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,

12-376

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவை ஆணைக்குழு

### இலங்கை விவசாய சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2021

இலங்கை விவசாய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் இலங்கை விவசாயச் சேவையின் III ஆந் தரத்திற்குரிய இதன் கீழ் 1 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள 148 பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்தகைமைகள் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் தினத்தன்று பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

இந்த அறிவித்தலில் “இலங்கை விவசாய சேவைப் பிரமாணக் குறிப்பு” என்பது 1880/26 ஆம் இலக்க 2014.09.19 ஆந் திகதி கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசரிக்கப்பட்ட இலங்கை விவசாய சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதில் இதுவரை மேற்கொண்டதும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளதுமான அனைத்துத் திருத்தங்களும் எனப் பொருள்படும். “நியமன அதிகார பீடம்” என்பது அரசாங்க சேவை ஆணைக்குழு எனவும், “செயலாளர்” என்னும் பதம் “விவசாய விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர்” எனவும், “சேவை” என்பது, இலங்கை விவசாய சேவை” எனவும் “நியமனம்” என்பது இலங்கை விவசாய சேவையின் III ஆம் தரத்தைச் சேர்ந்த நியமனம் எனவும், “எழுத்துப் பரீட்சை” என்பது இலங்கை விவசாய சேவையின் III ஆந் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரிட்சை - 2021 எனவும், வேறு விதத்தில் விபரிக்கப்படாது இருக்குமிடத்து “உத்தியோகத்தர்” என்பது இலங்கை விசாய சேவை உத்தியேகாத்தர் எனவும் பொருள்படும். விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2022.01.03 ஆந் திகதி ஆகும். இந்தப் பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயதக்தினால் 2022, மாச்சு மாதம் கொழும்பில் மாத்திரம் நடத்தப்படும்.

**குறிப்பு**.- 1929 ஆம் இலக்க 2015.08.21 ஆந் திகதியிட்ட அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கோரப்பட்ட அறிவித்தலுக்கு அமைவாக இலங்கை விவசாய சேவையின் III ஆந் தரத்திற்குரிய ஆட்சேர்ப்புக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணபித்துள்ள விண்ணப்பதாரர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்குமிடத்து அவர்கள் மீண்டும் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களின் பெயர்ப் பட்டியலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வெப் தளத்திலும் கமத்தொழில் அமைச்சின் வெப் தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அவர்கள் மீண்டும் விண்ணபிக்கும் போது பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

1. பதவிகள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை

| விடயப் பரப்பு | பதவி | வெற்றிட எண்ணிக்கை | பதவி குறியீடு |
|---|---|---|---|
| விவசாய அபிவிருத்தி | உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாய அபிவிருத்தி) | 85 | 1 |
| விவசாய ஆராய்ச்சி | உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாய ஆராய்ச்சி) | 59 | 2 |
| விவசாயப் பொருளியல் | உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாயப் பொருளியல்) | 04 | 3 |

**குறிப்பு** :

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் போது விண்ணப்பதாரருக்கு ஒரு விடயப்பரப்புக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

2. **ஆட்சேர்ப்பு முறை** :

2.1 *எழுத்துமூலப் பரீட்சை*.- எழுத்துமூலப் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாக இருக்கும் என்பதுடன் விடயப்பரப்பு இந்த அறிவித்தலின் முதலாவது பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது.

| வினாத்தாள் | காலம் (மணி) | ஆகக்கூடிய புள்ளிகள் | ஆகக்குறைந்த சித்தியடையும் புள்ளி |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 1 1/4 | 100 | 40 |
| விடய வினாத்தாள் (உரிய பதவிக்கு பொருத்தமான) | 2 | 100 | 40 |

2.2 எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு வினாத்தாள்களிலும் 40% வீதத்துக்கு அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

2.3 கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை.- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களின் அடிப்படைத் தகைமைகளைப் பரிசோதிப்பதற்கும் மற்றும் சேவை மூப்புக்கும் புள்ளிகள் வழங்குவதற்காக நடத்தப்படும் பரீட்சையில் ஒவ்வொரு விடயங்களிலும் 40% புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த விண்ணப்பதாரர்களிடையே வெற்றிட எண்ணிக்கையைப் போன்று இரண்டு மடங்கு விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

2.3.1 நேர்முகப் பரீட்சையின் போது சேவை மூப்புக்கு புள்ளிகள் வழங்கப்படும் முறை.- ஒரு விண்ணப்பதாரர் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்த நாளில் இருந்து விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி வரை பூர்த்தி செய்துள்ள செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்காலம் மாத்திரமே சேவை மூப்பு நிலைக்கு புள்ளி வழங்கும் பொருட்டு கணக்கெடுக்கப்படும். ஆகக்கூடியது 30 புள்ளிகள் என்ற வரையறைக்கு உட்பட்டு அத்தகைய செயலூக்கமுள்ள திருப்திகரமான சேவைக் காலத்திற்கு ஒவ்வொரு வருடத்துக்கும் 02 புள்ளிகள் என்ற ரீதியிலும் 180 நாட்களுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக் காலத்துக்கு 01 புள்ளி என்ற ரீதியிலும் புள்ளிகள் வழங்கப்படும்.

2.4 நேர்முகப் பரீட்சையின் போது சேவை மூப்புக்காக விண்ணப்பதாரர்கள் பெற்ற புள்ளிகள் இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு வழங்கியதன் பின்னர் குறித்த புள்ளியையும் பரீட்சையின் போது பெற்ற புள்ளியையும் சேர்த்து ஒவ்வொரு பதவிக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை இறுதி முன்னுரிமைப் பட்டியலொன்றை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் தயாரித்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு வழங்கப்படும். குறித்த முன்னுரிமைப் பட்டியலின் தேர்ச்சி ஒழுங்குமுறை அடிப்படையில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் உரிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

**3. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நியதிகளும், நிபந்தனைகளும் :**

3.1 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். 2016.01.01 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னரான தினத்தில் அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் அவர்களுக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கும் கொள்கைத் தீர்மானங்களும் கட்டுப்படுதல் வேண்டும்.

3.2 மேலும், ஆண் உத்தியோகத்தர் ஒருவர் எனின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கும் பெண் உத்தியோகத்தர் ஒருவர் எனின் தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கும் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது பணிப்பு விடுக்கின்றவாறு நீங்கள் அதற்கான பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

3.3 நியமனதாரர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு இணங்குதல் வேண்டும்.

3.4 இலங்கை விவசாய சேவை உத்தியோகத்தர்களின் சேவைகளின். தேவைப்பாடுகளுக்கு அமைவாக அனைத்து மாகாணங்களின் மாகாண அரசாங்க சேவைகளிலும் சேவையாற்றுவதற்கு உட்பட்டு, அதற்காக உத்தியோகத்தர் மாகாண அரசாங்க சேவையின் பதவியில் சேவையாற்றுவதற்கு தற்காலிகமாக விடுவிக்கப்படுவர். அவ்வாறு சேவையாற்ற வேண்டிய காலப் பகுதியைத் தீர்மானிப்பது சேவையின் தேவைப்பாட்டுக்கு அமைவாக நியமன அதிகாரபீடம் மற்றும் உரிய மாகாண அதிகாரபீடத்துக்கும் இடையே ஏற்படுத்திக் கொள்கின்ற இணக்கப்பாட்டுக்கு அமைவாகவே மேற்கொள்ளப்படும்.

(அ) சேவையிலிருந்து விடுவிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நியமனக் கடிதமொன்று மாகாண அதிகார பீடத்தினால் உரிய அலுவலருக்கு வழங்கப்படும். அலுவலர் உரிய மாகாண அதிகாரபீடத்தினால் மாகாணத்திற்குள் இடமாற்றம் செய்யப்படுவதற்கும் உட்பட்டுவார்.

(ஆ) மாகாண அரசாங்க சேவைக்கு விடுவிக்கப்பட்டாலும், குறித்த காலத்துக்குள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டுக்கும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் ஆளாகுதல் வேண்டும்.

(இ) மாகாண அரசாங்க சேவைக்காக விடுவிக்கும் காலம் முடிவடைந்ததும் நிரந்தர சேவைக்கு மீளவும் வருதல் வேண்டும்.

3.5 இலங்கை விவசாய சேவை III ஆந் தரத்திற்கு நியமிக்கும்போது மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற அலுவலர்கள் 01 ஆண்டு கால பதில் கடமைக் காலத்துக்கும் உட்பட்டு நியமிக்கப்படுவர். மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் மூலம் நியமிக்கப்படுகின்ற அலுவலர்கள் 3 ஆண்டு காலத்துக்குள் முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

3.6 **திறன் விருத்தி.-** சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்களுக்காக விவசாய அபிவிருத்திக்கு உரியதான சமூகப் பொருளாதார, கலாசார மற்றும் சேவையாற்றுகின்ற சூழலின் மேம்பாடு தொடர்பான திறனைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான பயிற்சியொன்று விவசாயத் திணைக்களத்தினால் அல்லது திணைக்களம் அடையாளம் காணும் வேறு நிறுவனத்தினால் (உதாரணமாக - இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்) ஒரு (01) மாத கால பயிற்சிப் பாடநெறியொன்று வழங்கப்படும். பாடநெறி இறுதியில் மேற்கொள்ளப்படுகின்ற மதிப்பீட்டின் பின்னர் சான்றிதழொன்றும் வழங்கப்படும். பதவியில் உறுதிப்படுத்துவதற்கு இந்தச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

3.7 அரசாங்க சேவை நியமனங்களை நிருவகிக்கின்ற பொது நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் இலங்கை விவசாய சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கும் திணைக்கள ஒழுங்கு விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிக் குடியரசின் தபானவிதிக்கோவை ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணங்களுக்கும், 1589/30 ஆம் இலக்க 2009.02.20 ஆந் திகதி கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகளுக்கும் (இதனகத்துப் பின்னர் நடைமுறை விதிகள் என அழைக்கப்படும்) மேலே குறிப்பிட்ட நியதிகள். நிபந்தனைகள், ஒழுங்குவிதிகள், ஏற்பாடுகள் மற்றும் விதிகளில் ஏற்கனவே மேற்கொண்டுள்ள அல்லது இதனகத்துப் பின்னர் மேற்கொள்ளவுள்ள திருத்தங்களுக்கும் உட்பட்டு தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் இலங்கை விவசாய சேவையின் III ஆந் தரத்தில் நியமிக்கப்படுவர்.

3.8 நியமனதாரர்கள் 18/ 2020 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கும் ஏற்புடையவாறு உரிய மட்டத்தில் அரச கருமமொழி தேர்ச்சியையும் பெறல் வேண்டும்.

4. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்.-**

இந்தப் பதவிகளுக்காக 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கு அமைவாக ஒருங்கிணைந்த மாதாந்த சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :

SL-1- 2016 - ரூபா 47,615 -1,335 × 10-1630 × 8-2,170 × 17- ரூபா 110,895.00

இலங்கை விவசாய சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

III ஆந் தரத்தின் ஆரம்ப சம்பள படிநிலை ரூபா 47,615.00 ஆகும்.

5. **ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள் :**

5.1 **அடிப்படைத் தகைமைகள் :**

5.1.1 விவசாய அபிவிருத்தித் துறைக்கு-

(அ) இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் விசேட வகுப்பில் விவசாயப் போதனாசிரியர் பதவியை வகிக்கும் ஒரு அலுவலராக இருத்தல் ;

அல்லது

(ஆ) இலங்கைத் தொழில்நுட்ப சேவையில் அல்லது மாகாண தொழில்நுட்ப சேவையில் ஆகக் குறைந்தது பத்து (10) வருடங்கள் செயலூக்கமுள்ள, திருப்திகரமான ஒரு சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள விவசாயப்போதனாசிரியர் பதவியை வகிக்கும் ஒரு அலுவலராக இருத்தல்;

அல்லது

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற விவசாய விஞ்ஞானம் தொடர்பில் நான்கு வருட பட்டம் ஒன்றைப் பெற்றுள்ள விவசாயத் திணைக்களத்தின் செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபடுகின்ற அல்லது ஈடுபட்ட விவசாயத் திணைக்களத்தின் அல்லது மாகாண விவசாயத் திணைக்களத்தின் கீழ் ஐந்து (05) வருட கால செயலூக்கமுள்ள, திருப்திகரமான ஒரு சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள இணை அலுவலர் சேவை வகுதியைச் சேர்ந்த ஒரு அலுவலராக இருத்தல் ;

அல்லது

(ஈ) 10 ஆண்டுகள் செயலூக்கமுள்ள, திருப்திகரமான ஒரு சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள பூங்கா உதவியாளர் பதவியை வகிக்கின்ற ஒரு அலுவலராக இருத்தல் ;

அல்லது

(உ) 5 வருட செயலூக்கமுள்ள, திருப்திகரமான ஒரு சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஒரு விவசாய விஞ்ஞான அல்லது விஞ்ஞானமானிப் பட்டத்தைப் பெற்ற விவசாயப் போதனாசிரியர் அல்லது பூங்கா உதவியாளர் பதவியை வகிக்கின்ற ஒரு அலுவலராக இருத்தல்.

5.1.2 **விவசாயப் பொருளியல் துறைக்கு-**

(அ) 5 வருட செயலூக்கமுள்ள திருப்திகரமான ஒரு சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள பொருளியல் உதவியாளர் பதவியை வகிக்கின்ற ஒரு அலுவலராக இருத்தல் ;

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படுகின்ற விவசாயம் தொடர்பில் நான்கு வருட பட்டம் ஒன்றைப் பெற்றுள்ள விவசாயத் திணைக்களத்தின் செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபடுகின்ற அல்லது ஈடுபட்ட விவசாயத் திணைக்களத்தின் கீழ் ஐந்து (05) வருட கால செயலூக்கமுள்ள, திருப்திகரமான ஒரு சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள இணை அலுவலர் சேவை வகுதியைச் சேர்ந்த ஒரு அலுவலராக இருத்தல்.

5.1.3 **விவசாய ஆராய்ச்சித் துறைக்கு-**

(அ) இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் விசேட வகுப்பின் ஆராய்ச்சி உதவியாளர் பதவியை, மண் வள ஆய்வு மற்றும் காணி மதிப்பீட்டு அலுவலர் பதவியை வகிக்கின்ற ஒரு அலுவலராக இருத்தல் ;

அல்லது

(ஆ) இலங்கைத் தொழில்நுட்ப சேவையில் ஆகக் குறைந்தது பத்து (10) வருட கால செயலூக்கமுள்ள, திருப்திகரமான ஒரு சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஆராய்ச்சி உதவியாளர் பதவியை, மண் வள ஆய்வு மற்றும் காணி மதிப்பீட்டு அலுவலர் பதவியை வகிக்கின்ற ஒரு அலுவலராக இருத்தல் ;

அல்லது

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படுகின்ற விவசாயம் தொடர்பில் நான்கு வருட பட்டம் ஒன்றைப் பெற்றுள்ள அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் தாவரவியல், இரசாயனவியல் அல்லது விலங்கியல் தொடர்பான நான்கு வருட சிறப்புப் பட்டம் பெற்றுள்ள விவாசயத் திணைக்களத்தின் அல்லது மாகாண விவசாயத் திணைக்களத்தின் செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபடுகின்ற அல்லது ஈடுபட்ட விவசாயத் திணைக்களத்தின் அல்லது மாகாண விவசாயத் திணைக்களத்தின் கீழ் ஐந்து (05) வருட கால செயலூக்கமுள்ள, திருப்திகரமான ஒரு சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள இணை அலுவலர் சேவை வகுதியைச் சேர்ந்த ஒரு அலுவலராக இருத்தல் ;

அல்லது

(ஈ) 5 வருட செயலூக்கமுள்ள திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள விவசாய விஞ்ஞானம் அல்லது விஞ்ஞானப் பட்டம் பெற்றுள்ள ஆராய்ச்சி உதவியாளர் பதவியை, மண் வள ஆய்வு மற்றும் காணி மதிப்பீட்டு அலுவலர் பதவியை வகிக்கின்ற ஒரு அலுவலராக இருத்தல்.

**குறிப்பு :**

உயர்நீதிமன்ற விண்ணப்ப இலக்கம் 61/2006 இன் தீர்ப்புக்கு அமைய இலங்கை விவசாயச் சேவை தொடர்பிலான முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பு திருத்தப்பட்ட 1619/25 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2009.09.18 ஆந் திகதியன்று விவசாயக் கண்காணிப்பு அலுவலர் அல்லது நிகழ்ச்சி உதவியாளர் (விவசாயம்) எனும் பதவியொன்றை வகித்து 5 வருட செயலூக்கமுள்ள சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள விவசாயக் கண்காணிப்பு அலுவலர் அல்லது நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (விவசாயம்) எனும் பதவியொன்றை வகிக்கும் அலுவலர்களாக இருத்தல் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பிக்க அடிப்படைத் தகுதியாகக் கருதப்படும் என்பதுடன் விவசாய அபிவிருத்தி அல்லது விவசாயப் பொருளியல் அல்லது விவசாய ஆராய்ச்சி ஆகிய துறைகளில் ஒரு துறைக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்காக விண்ணப்பிக்க முடியும்.

5.2 **உடற் தகுதி.**- ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றக் கூடியவாறான உடற் தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5.3 **வேறு தகைமைகள்.**-

(i) விண்ணப்பதாரர்கள் நல்லொழுக்கமுடையவர்களாக இருத்தல் வேண்டும்;

(ii) விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தன்று அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்;

(iii) விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற திகதிக்கு பின்னர் விண்ணப்பதாரருக்கு கடந்த காலத்துக்கு உரியதாக செயல்வலுப் பெறும் வகையில் வழங்கப்படுகின்ற சலுகை அல்லது பதவியுயர்வுகள் என்பன பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக கருதப்படமாட்டாது.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/ 2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனைக்கு ஆளாகாது இருத்தல்.

6. **பரீட்சைக் கட்டணம் :**

6.1 பரீட்சைக் கட்டணம் ரூபா 1,200.00 ஆகும்.
இந்தப் பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் செலவுத் தலைப்பு 20-03-02-13 இன் கீழ் அரசாங்க வருமானத்தில் வரவு வைக்கக்கூடியவாறு நாட்டிலுள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும் பணத்தைச் செலுத்தி விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டை அதன் ஒரு விளிம்பின் மூலம் விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்துக்காக பணக் கட்டளை அல்லது முத்திரை பொறுப்பேற்கப்பட மாட்டாது. பரீட்சைக்காக செலுத்துகின்ற கட்டணம் எந்தவொரு காரணத்தின் அடிப்படையிலும் மீளச் செலுத்தவோ அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றம் செய்யவோ முடியாது. பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

7. **விண்ணப்பங்களை தயாரித்தல் மற்றும் பரீட்சைக்கு விண்ணப்பிப்பது தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

7.1 மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே சமர்ப்பிக்க வேண்டும். இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை பயன்படுத்தி மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். தாளின் இருபக்கங்களையும் பயன்படுத்திக் கொண்டு அங்குலம் 8 ½" x 12" (ஏ4) அளவினைக் கொண்ட தாளில் தயாரித்து பரீட்சார்த்தியின் கையெழுத்தினால் தெளிவாக பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 01 தொடக்கம் 06 வரையான பகுதியை முதற் பக்கத்திலும் மீதியை 2 ஆம் 3 ஆம் பக்கங்களிலும் உள்ளடக்கியவாறு விண்ணப்பப்படிவத்தை தயாரிக்க வேண்டும் என்பதை குறிப்பாக கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

7.2 மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்றதாக இல்லாத விண்ணப்பப்படிவங்கள், பூரணப்படுத்தப்படாத தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள், அழிந்து போகக் கூடிய திரவம் மற்றும் மாற்றங்கள்

செய்த விண்ணப்பப்படிவங்கள் மற்றும் குறியீட்டு இலக்கம், ஏனைய தகவல்கள் மீளவும் எழுதப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் அறிவிக்காமலேயே நிராகரிக்கப்படும். அஞ்சல் செய்யும் விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தன்வசம் கட்டாயம் வைத்திருத்தல் வேண்டும் எனத் தெரிவிப்பதுடன் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் போது தேவைப்படின் அதனை சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

7.3 விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர், சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் கட்டாயம் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் 2022.01.03 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பரீட்சை ஆணையாளர் நாயகம் (தாபனப் பரீட்சை) ஒழுகமைப்பு கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த. பெ. எண் 1503, கொழும்பு" என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்" இலங்கை விவசாயச் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – (2021)" எனக் குறிப்பிடல் வேண்டும்.

7.4 விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை விவசாயத் திணைக்களம் எனின் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் ஊடாகவும், மாகாண விவசாயத் திணைக்களம் எனின் மாகாண விவசாயப் பணிப்பாளர் ஊடாகவும் விவசாய அமைச்சு எனின் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் ஊடாகவும் அனுப்புதல் வேண்டும்.

**குறிப்பு :**

இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்றவாறு இல்லாத, எல்லா விதத்திலும் பூர்த்தி செய்யப்படாத மற்றும் முறையற்ற விண்ணப்பப்படிவங்கள் எந்தவொரு அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். விவசாயத் திணைக்களத்தின் அல்லது விவசாய அமைச்சின் அலுவலர் பெயருக்கு விண்ணப்பப்படிவம் அனுப்பப்படலாகாது. ஏதும் விண்ணப்பப்படிவம் தபால் மூலம் அனுப்பும் போது காணாமல் போனது அல்லது தாமதமானது என்ற எந்தவொரு முறைப்பாடு கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

**8. பரீட்சைக்குத் தோற்றல் :**

8.1 விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்திலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரர் தமது ஒப்பத்தை திணைக்களத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தல் வேண்டும்.

பரீட்சார்த்தி ஒருவர் தமக்குரிய பரீட்சை நிலையத்தில் தமக்குரிய பரீட்சைக்கு தோற்ற வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் உரிய பரீட்சை நிலையத்துக்கான ஒப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை முதலில் குறித்த மண்டபத்தில் தோற்றுகின்ற தினம் குறித்த பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். தமக்கு தோற்றுவதற்கு உரித்துள்ள பரீட்சையின் குறித்த வினாத்தாளுக்கு விடையளிப்பது ஒவ்வொரு பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள் இந்த வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கின்ற ஒழுங்கு விதிகளுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்படல் வேண்டும். அவ்வாறான ஒழுங்கு விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கின்ற தண்டணைக்கு ஆளாகுதல் வேண்டும்.

8.2 பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டையை வழங்குவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமையைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளுவதாக கருதுதல் கூடாது.

8.3 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்னும் முன் கணிப்புக்கு அமைவாக விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்துக்கு அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் உரிய கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் அதுபற்றி குறிப்பிட்டு பத்திரிகை மூலம் அறிவித்தலொன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்ததன் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காது இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சைக் கிளையில் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும் போது விணப்பதாரர் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம்

மற்றும் முகவரியை சரியாகக் குறிப்பிடல் வேண்டும். கொழும்புக்கு வெளியே வசிக்கும் விண்ணப்பதாரர் எனின் குறித்த விபரங்களுடன் பெக்ஸ் மூலம் அனுமதி அட்டையின் பிரதி ஒன்றை துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமானவாறு விண்ணப்பதாரரின் பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றை இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு பெக்ஸ் மூலம் அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு வினவும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவுகின்ற ஏதும் தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக உங்கள் வசம் வைத்திருக்கும் விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதி, மற்றும் விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் செய்தபோது பதிவுசெய்த பற்றுச்சீட்டை ஆயத்தமாக வைத்திருத்தல் பயனுள்ளதாக இருக்கும்.

9. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.**- தான் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடம் தொடர்பிலும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வண்ணம் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காக கீழே காட்டப்பட்டுள்ள ஏதும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும் :

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும் பரீட்சார்த்தியின் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடியவாறு முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காதவாறு பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்துக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்ததிலிருந்து பரீட்சை முடிந்து வெளியேறும் வரை பரீட்சை மேற்பார்வை அலுவலர்கள் விண்ணப்பதாரர்களை அடையாளம் காணக்கூடியவாறு முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காதவாறு இருத்தல் வேண்டும்.

10. **பரீட்சை முறைமை :**

10.1 **பரீட்சை மொழி மூலம்.**- பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கின்ற மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

10.2 பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுகின்ற அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரு மொழியில் மாத்திரமே விடையளிக்க முடியும்.

11. **போட்டிப் பரீட்சை நடைமுறை மற்றும் பாட விதானம்.**- அனைத்து விண்ணப்பதாரர்களும் இதனகத்துப் பின்னர் காட்டப்படுகின்ற பாட விதானத்துக்கு ஏற்ப 1 ஆவது மற்றும் 2 ஆவது வினாத்தாள்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

ஒவ்வொரு பதவிக்கும் உரிய பாட விதானங்கள் முதலாவது பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது.

12. விண்ணப்பப்படிவத்துடன் சான்றிதழ்கள் எதனையும் இணைத்து அனுப்புதல் கூடாது. விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் அவர்கள் தங்களது விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிட்டுள்ள தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

13. **பொய்யான தகவல்களை வழங்குதல்.**- பரீட்சார்த்தியொருவர் இந்தப் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலப்பகுதியில் அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பப்படிவத்தை நிராகரிப்பதற்கு இடமுண்டு. பரீட்சார்த்தி சமர்ப்பித்துள்ள ஏதும் விடயம் போலியானது என அல்லது ஏதும் முக்கியமான விடயமொன்றை வேண்டுமென்றே மறைத்துள்ளார் என நியமனம் வழங்கப்பட்ட பின்னர் தெரியவரும் பட்சத்தில் அது அவரை அரசாங்க சேவையிலிருந்து நீக்குவதற்கு காரணமாக அமையலாம்.

பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறு வழங்குதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயத்தினால் பிறப்பிக்கின்ற சட்ட நடைமுறை விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படல் வேண்டும். குறித்த சட்ட நடைமுறைகளை மீறும் பட்சத்தில் அவர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கின்ற தண்டனைக்கு ஆளாகுதல் வேண்டும்.

14. இதில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதும் விடயங்கள் காணப்படின் அது தொடர்பிலான இறுதித் தீர்மானம் நியமன அதிகாரபீடத்தினால் எடுக்கப்படும்.

15. நிலவுகின்ற வெற்றிடங்கள் அனைத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியை நிரப்புவது தொடர்பிலான இறுதித் தீர்மானம் நியமன அதிகாரபீடத்தினாலேயே எடுக்கப்படும்.

16. சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்ற இந்த அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி அறிவித்தல் சரியெனக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர் ,
விவசாயஅமைச்சு.

ரஜமல்வத்த ஒழுங்கை,
பத்தரமுல்ல.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

இலங்கை விவசாய சேவையின் III ஆந் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை 2021

Limited Competitive Examination for Recruitment to the Grade III of the Sri Lanka Agricultural Service – 2021

(அலுவலக உபயோகத்துக்காக)

| விண்ணப்பிக்கின்ற பரீட்சைக்குரிய பதவி (வர்த்தமானி அறிவித்தலில் 1 ஆவது மற்றும் 2 ஆவது பந்திகளைப் பார்க்கவும்) | |
|---|---|
| பதவி | பதவி இலக்கம் |
| | |

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம்
(வர்த்தமானியின் அறிவித்தலில் 10 ஆவது பந்தியை பார்க்கவும் - உரிய இலக்கத்தை கூட்டுக்குள் குறிப்பிடவும்).
சிங்களம் – 2
தமிழ் – 3
ஆங்கிலம் – 4

உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாய ஆராய்ச்சி) பதவிக்காக விண்ணப்பிப்பதாயின் விடையளிப்பதற்கு தெரிவு செய்கின்ற பகுதி (முதலாவது பிண்ணினைப்புக்கு அமைவாக (அ) எனின் கூட்டுக்குள் "1" எனவும் (ஆ) எனின் கூட்டுக்குள் "2" எனவும் குறிப்பிடுக. இதனை பின்னர் மாற்றம் செய்ய முடியாது.

1. (i) முழுப் பெயர் : (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
உ-ம்:- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDENA

(ii) இறுதியாக வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்து பின்னர் வரும் வகையில் பெயர் : (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
உ-ம்:- GUNAWARDENA, H.M.S.K

(iii) முழுப் பெயர் : (சிங்களத்தில் / தமிழில்) :----.

2. (i) நிரந்தர வதிவிட முகவரி :- (பரீட்சை அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அனுப்பப்படும்)

(அ) சிங்களத்தில் / தமிழில் :----.

(ஆ) ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் :----.

(ii) அலுவலக முகவரி.- (அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் ஈடுபடுகின்ற அலுவலர் ஒருவராயின், அவரின் அலுவலக முகவரியைக் குறிப்பிடல் வேண்டும்.
முகவரியில் ஏதும் மாற்றம் ஏற்படுமிடத்து அதனை உடனடியாக அறிவித்தல் வேண்டும்.) :----.

(அ) சிங்களத்தில் / தமிழில் :----.
(ஆ) ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் :----.

3. ஆணா/பெண்ணா : (முன்னே உள்ள கூட்டுக்குள் உரிய இலக்கத்தை இடவும்)
ஆண் - 0
பெண் - 1 ☐

4. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

5. தொலைபேசி இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐

6. (i) பிறந்த திகதி : வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(ii) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது :-

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

7. இலங்கை பிரசையா என்பது பற்றி : (உரிய கூட்டுக்குள் புள்ளடி இடுக) :

ஆம் : ☐ இல்லை : ☐

8. கல்வித் தகைமைகள் :

8.1. பட்டப் படிப்புத் தகைமைகள் :

| பெற்றுள்ள பட்டம்/ பட்டங்கள் | பெற்றுள்ள பட்டம்/பட்டங்கள் நான்கு ஆண்டுகளைக் கொண்ட பட்டமா/ பட்டங்களா | கல்வியாண்டு மற்றும் குறித்த பட்டம் செல்லு படியாகும் தினம் (தெளிவாகக் குறிப்பிடுக) | பல்கலைக்கழகம்/ கல்லூரி | பாடங்கள் | சித்தி | மொழி மூலம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |

9. இதற்கு முன்னர் இலங்கை விவசாய சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றியுள்ளீரா? தோற்றியிருப்பின் தோற்றிய ஆண்டு/ஆண்டுகளைக் குறிப்பிடுக .......................

10. மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை பரீட்சார்த்திகள் அறிவித்தலில் 5 ஆவது பந்தியின் கீழ் இப்பரீட்சைக்கு தகுதி பெறுவதற்கான தகைமை பின்வருமாறு.

| தற்போதைய பதவி<br>1. ஆராய்ச்சி உதவியாளர்<br>2. மண் வள ஆய்வு அலுவலர்<br>3. காணி மதிப்பீட்டு அலுவலர்<br>4. விவசாயப் போதனாசிரியர்<br>5. பொருளியல் உதவியாளர்<br>6. பூங்கா உதவியாளர்<br>7. இணை அலுவலர்கள் சேவை வகுதி (பதவியைக் குறிப்பிடுக) | மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் கீழ் தகுதி பெறுகின்ற பதவிகள்<br><br>1.உ.வி.ப (விவசாய ஆராய்ச்சி)<br>2.உ.வி.ப (விவசாய அபிவிருத்தி)<br>3.உ.வி.ப (விவசாயப் பொருளியல்) | உ.வி.ப (விவசாய அபிவிருத்தி) உ.வி.ப (விவசாய ஆராய்ச்சி) அல்லது உ.வி.ப (விவசாயப் பொருளியல்) பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமைகளை பூர்த்தி செய்கின்ற திகதி (வர்த்தமானி அறிவித்தலில் 5.1 இல் தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற திகதி) |
|---|---|---|
| | | |

11. நீதிமன்றத்தின் முன் நீர் ஏதும் குற்றமொன்றுக்கு குற்றவாளியாகியுள்ளீரா? ஆம்/இல்லை,

ஆம் எனின், விபரங்களைத் தருக :.......................................................................

12. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சை கட்டணம் செலுத்திய அஞ்சல் அலுவலகம் :----.

(ii) பற்றுச் சீட்டு இலக்கம் மற்றும் திகதி :----.

(iii) செலுத்திய தொகை :----.

| |
|---|
| பற்றுச்சீட்டை கழறாதவாறு அதன் ஒரு விளிம்பை இங்கு ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.) |

13.**விண்ணப்பதாரியின் உறுதிமொழி** :

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும், சரியானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களில் ஏதும் போலியானது அல்லது தவறானது என நான் தெரிவு செய்வதற்கு முன்னர் அறியவரும் பட்சத்தில் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனவும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அது பற்றி தெரியவரும் பட்சத்தில் எனது நியமனம் உடனடியாக இரத்துச் செய்யப்படும் எனவும், விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது ஏதும் தவறுகள் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் அதன் பொறுப்பை நானே ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் நான் நன்கு அறிவேன். மேலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கின்ற சட்ட விதிகளுக்கும் நான் கட்டுப்படுவேன் எனவும். மேலும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளதெனவும், நான் ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே சமர்ப்பித்துள்ளேன் எனவும் இத்தால் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

14. **திணைக்களத் தலைவரின்/மாகாண திணைக்களத் தலைவரின்/அமைச்சுச் செயலாளரின் சான்றிதழ்** :

திரு./ திருமதி/ செல்வி ............................. இத்திணைக்களத்தில்/ மாகாண சபையில்.................... ஆக சேவையாற்றுகின்றார் எனவும், அவரின் வேலை, நடத்தை திருப்திகரமாகவுள்ளது எனவும், கிட்டிய 05 ஆண்டு காலத்துக்குள் அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளார் எனவும், இப் பதவிக்குரிய 5.1 ஆம் பந்தியின் அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் எனவும், அவர் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு அனைத்து விதத்திலும் தகைமை பெற்றுள்ளார் எனவும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது/எடுக்கப்படவில்லை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். அவர் தெரிவு செய்யப்படுமிடத்து தற்பொழுது வகிக்கின்ற பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. (தேவையற்ற வசனங்களை வெட்டி விடுக.)

----,
திணைக்களத் தலைவரின் /மாகாண திணைக்களத்
தலைவரின்/அமைச்சு செயலாளரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

(உத்தியோகபூர்வ முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)

**முதலாவது பின்னிணைப்பு**

**மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளும் பாடவிதானமும்**

**1 ஆம் வினாத்தாள் - நுண்ணறிவு**

இது மொழி, கணிதம் மற்றும் தர்க்கிக்கும் ஆற்றல்களைப் பரிசீலித்துப் பார்ப்பதற்கான வினாக்கள் அடங்கிய ஒரு பல்தேர்வு வினாத்தாள்/குறுகிய வினாத்தாள் ஆகும். காலம் 1¼ மணித்தியாலம். மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

**2 ஆவது வினாத்தாள் - விடய ஆய்வு**

இது குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறை பற்றிய அறிவைப் பரிசீலிப்பதற்காக நடத்தப்படும் பதவிக்கான ஒரு எழுத்து மூல உளச்சார்புப் பரீட்சையாகும். ஒவ்வொரு விண்ணப்பதாரரினாலும் தான் விண்ணப்பிக்கின்ற பதவிக்கு அல்லது பதவிகளுக்குப் பொருத்தமான விதத்தில் அவர்கள் கீழ்க்காணும் வினாத்தாள்களில் தேர்ந்தெடுக்கப்படும் வினாத்தாள்களுக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள். இந்த வினாத்தாள் குறுகிய வினாக்களையும் பல்தேர்வு வினாக்களையும் உள்ளடக்கியிருக்கும். நேரம் 2 மணித்தியாலங்கள் மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

**குறிப்பு**:- கீழ்க்காணும் பாடவிதானத்துக்கு அமைய மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை வினாத்தாள் விடய ஆய்வுக்கு கூடிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுத் தயாரிக்கப்படும். பரீட்சை ஆணையாளரினால் தீர்மானிக்கப்படும் விதத்திற்கு அமைய பரீட்சை நடாத்தப்படும்.

ஒவ்வொரு பதவிக்குரிய பாடவிதானங்கள் பின்வருமாறு காணப்படும்.

**1. விவசாய ஆராய்ச்சித் துறைக்கான பாடவிதானம் :**

விண்ணப்பதாரர்களினது விருப்பத்தின் பேரில் கீழ்க்காணும் (அ), (ஆ) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள 02 பகுதிகளில் ஒரு பகுதிக்கு மாத்திரம் விடையளிக்கப்படுதல் வேண்டும் :

**(அ) பகுதி**

01. **விவசாயத் தாவரவியல்**.- தாவர வகுதிகள் பற்றிய கோட்பாடுகள், தாவரங்களின் வளர்ச்சி மற்றும் பௌதீகவியல் கோட்பாடுகள்.

02. **பாரம்பரிய தாவர இனப்பெருக்கம்**.- மென்டலின் கோட்பாடு, பாரம்பரிய இனப்பெருக்கம், பாரம்பரிய அணு மாற்றம், இளையங்கள் வளர்ப்பு, கணிய மரபியல், தாவர இனப்பெருக்கக் கோட்பாடுகள், மரபணு வளங்கள் பாதுகாப்பு, உயிர் பல்வகைத் தன்மை, மகரந்தச் சேர்க்கை இனப்பெருக்கக் கோட்பாடுகள், விகாரமடைதல், கலப்பின மற்றும் கலப்பினமற்ற தாவரங்கள், பரந்தளவில் பயன்படுத்தப்படுகின்ற தாவர இனப்பெருக்க முறைகள் மற்றும் தற்போதைய போக்குகள்.

03. **தாவர நோயியல்**.- நோய்க் கிருமிகளின் வகை, தொற்றுகின்ற விதம், இவற்றைக் கட்டுப்படுத்தும் கோட்பாடுகள், தாவர நோயியலும் நோய்க் கட்டுப்பாடும் பற்றிய தற்போதைய போக்குகள், நோயைக் கண்டறியும் நுட்பங்கள், நோய் பண்பியல்பு, கொக்கிக் கருதுகோள் பிரயோகம், நோய் கண்டறியும் நவீன நுட்பங்கள் (ELISA)மற்றும் தற்போதைய போக்குகள்.

04. **பூச்சியியல் அடிப்படைக் கோட்பாடு**.- விலங்கியல் பாகுபாட்டுக் கோட்பாடுகள், கிருமி வகைகளின் இயல்பு, வாழ்க்கை வட்டத் தகவல்கள், பாதிப்புகள், பூச்சி அழிவின் பொருளாதார முக்கியத்துவம் பூச்சிகளின் குடித்தொகை அழிவு பற்றிய மதிப்பீடு.

05. **விதைத் தொழில்நுட்பம்**.- விதைப் பௌதீகவியல், விதைக் கட்டமைப்பு, செயலற்று முளைத்தல், உயிர் வாழ்தல், நம்பகத்தன்மையும் தூய்மை பற்றிய சோதனையும், விதை உற்பத்திக் கட்டங்கள், விதைகளைச் சான்றுப்படத்துதல், விதைகளைக் களஞ்சியப்படுத்தல்.

06. **இழைய வளர்ப்பு**.- கோட்பாடுகள், இழைய வளர்ப்பு வசதிகளும், தேவைகளும், மூலங்கள், இழைய வளர்ப்பு முறைகளின் பிரயோகங்கள், முதலுரு தாவர வளர்ப்பு முறை, விகாரமடைந்து புதிதாகத் தோன்றுதல், கரு மீட்பு, செயற்கைக் கருத்தரிப்பு, மரபணுப் பரிமாணங்கள். ப்ராக் பாதுகாப்பு.

07. **விவசாய இரசாயனவியல்**.- உயிர் இரசாயனவியல் கோட்பாடுகள், விவசாயத்தில் உயிர் இரசாயனவியலின் செயல்முறைப் பிரயோகங்கள், உணவு இரசாயனவியல் பற்றிய கோட்பாடுகள், விவசாய உணவு இரசாயனவியலின் செயல்முறைப் பிரயோகங்கள், பகுப்பாய்வு ரீதியான இரசாயனவியல் பற்றிய கோட்பாடுகள், விவசாயத்தில் காணப்படும் செயல்முறைப் பிரயோகங்கள்.

அல்லது

**(ஆ) பகுதி**

01. **விவசாயத் தாவரவியல்**.- விவசாயக் காலநிலையியல், சுற்றாடல், நில அபிவிருத்தி, நிலப் பண்படுத்தல், பயிர் வளர்ச்சியும் பௌதீகவியலும் பற்றிய கோட்பாடுகள். பயிர் வளர்ச்சி அளவீடு, அறுவடைச் சுட்டிகள், பசளையின் சிபாரிசும் வினைத்திறனும், களை உயிரியலும் கட்டுப்பாடும், நீர்ப்பாசன முறைகள் பற்றிய கோட்பாடுகள், பயிர்ச்செய்கை, மண் மற்றும் நீர் தொடர்புகள் பற்றிய கோட்பாடுகள்.

02. **பயிர் விஞ்ஞானம்**.- நெல், மேட்டு நிலத் தானியப் பயிர்கள், பயிரினங்கள், கிழங்குப் பயிர்கள், மற்றும் ஏனைய வயல் பயிர்கள் என்பவற்றின் பௌதீகவியல், பரவல் முறைகள், தாவர நடுகை முறைகள், பயிர்கள் பராமரிப்பு பௌதீகவியல் இரசாயன உயிரியல் முறை, விஞ்ஞான ரீதியில் செயற்கைப் புல் நிலங்களை அமைத்தல், அவற்றைப் பராமரித்தல், மர உற்பத்திகளும் பழ உற்பத்திகளும் பற்றிய கோட்பாடுகள்.

03. **மண்ணியல்**.- மண் உருவாக்கம், மண்ணின் பௌதீக மற்றும் இரசாயனப் பண்புகள், பயிர்கள் சம்பந்தமான மண்ணிலுள்ள பிரச்சினைகள், மண் வளப் பராமரிப்பு, நடுகைக் கன்றுகள், போசணை நடுகைக் கன்றுகள் வகைப்படுத்தல் பற்றிய கோட்பாடுகள்.

04. **பாரம்பரிய தாவர இனப்பெருக்கம்**.- மெண்டலின் கோட்பாடு, பாரம்பரிய இனப்பெருக்கம், விகாரங்கள், மூலக்கூறு மரபியல், தாவர இனப்பெருக்கக் கோட்பாடு, தாவர வளங்கள் பாதுகாப்பு மற்றும் உயிர் பல்வகைமை.

05. **தாவர நோயியல்**.- தாவர நோய்கள், நடுகைக் கன்றுகள் நோய்த் தொற்றுக்களுக்கு ஈடுகொடுக்கும் விதம், உயிரியல் கட்டுப்பாடு, நோய்க் கட்டுபாட்டு நவீனப் போக்குகள்.

06. **பூச்சியியல் அடிப்படைக் கோட்பாடுகள்**.- (அ) வினாத்தாள் 04 ஆம் உப பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

07. **கள ஆராய்ச்சிக் கோட்பாடுகள், புள்ளிவிபரவியல் கோட்பாடுகள்**.- (Statistical Principles), இலங்கையின் விவசாயத் துறையினது முக்கியமான புள்ளி விபரங்கள் பட்டியல் பற்றிய அறிவு.

08. **பூச்சியியல்**.- விவசாயத்தில் காணப்படுகின்ற பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பூச்சிகள், அவற்றின் வகுதிகள், உள்ளக மற்றும் வெளியகப் பண்புகள், பல முறைமைகளின் கட்டமைப்பும் மற்றும் அவற்றின் தொழிற்பாடுகளும், பூச்சிகள் கட்டுப்பாடு பூச்சிகளின் அழிவு முக்கியத்துவம், கிருமிகளை இனங்காணுதல் அவற்றின் பாதிப்புகளும் கட்டுப்பாடுகளும், ஒன்றிணைந்த பூச்சிக் கட்டுப்பாடு.

09. **நுண்ணுயிரியல்**.- நுண்ணங்கிகள் மற்றும் விவசாயம் சார்ந்த சுற்றாடல், உயிரியல் தொழில்நுட்ப விவசாயத்துக்கான பிரயோகம். மண்ணிலுள்ள நுண்ணங்கிகளும் விவசாயத்தின் மீது அவற்றின் தாக்கங்களும்.

10. **உயிரினப் புள்ளிவிபரவியலும், பிரயோகப் புள்ளிவிபரங்களும்**.- புள்ளிவிபரவியல் சம்பந்தமான அடிப்படை அறிவு, விவசாய ஆராய்ச்சித் திட்டப் பகுப்பாய்வு, தரவுகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் பகுப்பாய்வுகள்.

**குறிப்பு**.- மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் ஊடாக உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாய ஆராய்ச்சி) பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் சகல பரீட்சார்த்திகளும் மேற்குறித்த (அ) அல்லது (ஆ) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள 02 பகுதிகளில் ஏதாவது ஒரு பகுதிக்கு மாத்திரம் விடையளிப்பது அவசியமாகும்.

**II விவசாய அபிவிருத்தித் துறைக்கான வினாத்தாள்**

01. **பொது விவசாயம்**.- இலங்கையின் காலநிலை வலயங்கள், காணிகள் அபிவிருத்தி, நிலத்தைப் பண்படுத்துதல் மற்றும் உபகரணங்கள், பயிர்கள் தாபிப்பு அதற்குத் தேவையான இயந்திர உபகரணங்கள், மண்ணும், மண் வளமும், நாற்று மேடைகளும் நாற்று மேடைப் பராமரிப்பும், தாவர மூலப்பொருட்கள், பூச்சிகள் கட்டுப்பாடு, தாவர நடுகைக் கன்றுகள் பாதுகாப்பு உபகரணங்கள், பயிர்ச் செய்கை முறை, நீர்ப்பாசன முறை, ஒன்றிணைந்த விவசாயம், பாதுகாப்பு விவசாயம், நுண் நீர்ப்பாசன முறை, அறுவடையும் அறுவடை உபகரணங்களும், அறுவடைக்குப் பின்னர் நிகழும்

இழப்புகள், பண்ணை சார்ந்த உற்பத்திகள் தயாரிப்பு, விசேட பிரதேசங்களில் பயிரிடுவதற்குப் பொருத்தமான மரக்கறிப் பயிர்கள், பழப் பயிர்கள், உலர் வலயப் பயிர்கள் மற்றும் தானியத்தைத் தேர்ந்தெடுக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள், ஒன்றிணைந்த பூச்சிக்கட்டுப்பாடு, ஒன்றிணைந்த தாவர நடுகைக் கன்றுகள் முறைமை, தாவரப் பாதுகாப்பு பற்றிய சட்டங்கள், மண் பாதுகாப்பு பற்றிய சட்டங்கள்.

02. **பயிர் உற்பத்தி.**- தாவரவியல், விவசாயக் காலநிலை மற்றும் சுற்றாடல், நில அபிவிருத்தி மற்றும் பண்படுத்தல், பயிர்களின் வளர்ச்சிக் கோட்பாடு மற்றும் நடுகைக் கன்றுகளின் பௌதீகவியல், பயிர்களின் வளர்ச்சியை அளவிடுதல், அறுவடைச் சுட்டிகள், பசளைகளின் சிபாரிசு, பசளைகளின் வினைத்திறன், களைத் தாவரங்களின் உயிரியல் கட்டுப்பாடு, நீர்ப்பாசனம், விவசாயவியல், பயிர்கள் மற்றும் நீர் என்பனவற்றுக்கு இடையிலுள்ள தொடர்புகள் பற்றிய கோட்பாடுகள்.

03. **களப் பயிர்கள்.**- அறிமுகம், சுற்றாடல் தேவைப்பாடுகள், தாவர வகுதிகள் மற்றும் இனங்கள், நடுகைக்கன்று வளர்ச்சி, பௌதீகவியல், விளைச்சலை நிர்ணயிக்கும் பௌதீக விஞ்ஞான கோட்பாடுகள், நெற்பயிரின் விவசாயவியல், பயிர் பராமரிப்பு மற்றும் உற்பத்திகள், மேட்டுநிலத் தானியங்கள், பயிரினங்கள், கிழங்குப் பயிர்கள் மற்றும் ஏனைய முக்கியமான களப் பயிர்கள். (புகையிலை, வெங்காயம், நார் தாவரங்கள் மற்றும் எண்ணெய் தரும் பயிர்கள்).

04. **பயிர்கள் பராமரிப்பு.**- இடைப்பயிர்ச் செய்கை, அறுவடை மற்றும், பதனிடல்.

05. **தோட்டப் பயிர்கள் உற்பத்தி.**- பழங்கள் உற்பத்தி, போசணை பெறுமானம், சமூகப் பொருளாதாரக் காரணிகள், ஆரம்பம் மற்றும் பரிமாணம், சுற்றாடல் தேவைப்பாடுகள், பயிர்ச்செய்கை முறை, நவீன தொழில்நுட்ப முறைகளின் பாவனை.

06. **பழ வர்க்கங்கள், மரக்கறி வகைகள் மற்றும் பூக்கள் உற்பத்தி.**- நாற்றுமேடைப் பராமரிப்பு, தோட்டப் பயிர்கள் பராமரிப்பு, பயிர்கள் மைய புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் பயிர்ச்செய்கை முறைகள், பழப் பயிர்களினதும் மரக்கறிப் பயிர்களினதும் பயிர்ச் செய்கை மேம்பாடு, பழ வர்க்கங்களையும் மற்றும் மரக்கறி வகைகளையும் அடிப்படையாகக் கொண்ட பயிர்ச்செய்கை முறைகள், அறுவடைக்குப் பின்னர் நிகழும் இழப்புகள், பழ வர்க்கங்களினதும் மற்றும் மரக்கறி வகைகளினதும் அறுவடைக்குப் பின்னர் நிகழும் இழப்புகளைத் தவிர்த்துக் கொள்ளுதல், பல்லுயிரினத் தொழில்நுட்பம், பழ வர்க்கங்களுக்கும், மரக்கறி வகைகளுக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் நிலவும் சந்தை வாய்ப்புகள், நவீன வரையறைகள் மற்றும் எதிர்காலத் தந்திரோபாயங்கள், மரக்கறி உற்பத்திக்கான தேவைகள், மரக்கறி வகைகளை அடிப்படையாகக் கொண்ட பயிர்ச் செய்கை முறைகள், சந்தைப்படுத்தல். பூ உற்பத்தி சார்ந்த கைத்தொழில்கள், விளம்பரத் தொழில்நுட்பம், பயிர்ச் செய்கை முறைகள், உன்னத நியமங்கள், நில அழகுபடுத்தல் பற்றிய கோட்பாடுகள்.

07. **விவசாய விஸ்தரிப்பும் பயிற்சியும்.**- விவசாய விஸ்தரிப்பு பற்றிய வரைவிலக்கணம் அவற்றின் குறிக்கோள்கள், விவசாய கைத்தொழில் அபிவிருத்தி விவசாய விஸ்தரிப்பு, கண்டுபிடிப்புகளைப் பின்பற்றுதல் மற்றும் பரப்புதல், தொடர்பாடல், விஸ்தரிப்பு பற்றி போதிக்கும் முறைகள், இலங்கையில் பயன்படும் விஸ்தரிப்பு அணுகுமுறைகள், ஆராய்ச்சி விஸ்தரிப்பு சம்பந்தமான தொடர்புகள், விஸ்தரிப்பு சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடல், மீளாய்வு மற்றும் மதிப்பீடு, இலங்கையின் விவசாய விஸ்தரிப்பு மற்றும் அதனுடன் சம்பந்தப்படும் நிறுவனங்கள், முதியோர் கல்வி, பயிற்சிசார் நடைமுறைகள், பயிற்சி சார்ந்த தேவைப்பாடுகளைக் கண்டறிந்து கொள்ளும் பொருட்டு பயன்படும் பல வழிமுறைகள், பாடத்திட்டங்களைத் தயாரித்தல், பயிற்சிகள் பற்றிய மதிப்பீடு, பயிற்சிகளுக்கான கற்புல செவிப்புல சாதனங்கள் பயன்பாடு.

08. **விதைத் தொழில்நுட்பம்.**- விதைகளின் பௌதிகவியல், விதைக் கட்டமைப்பு, விதையின் உருவமைப்புகள், விதை முளைத்தல், விதை முளைதிறன், விதைகள் பரிசோதனை, விதைகள் முளை திறன் மற்றும் விதைத் தூய்மை பற்றிய பரிசோதனை, விதை உற்பத்திக் கட்டங்கள், விதைகள் சான்றுபடுத்தல், விதைகள் களஞ்சியப்படுத்தல்.

09. **தேனீ வளர்ப்பு.**- ஒரு தேன் கூட்டிலுள்ள தேனீக்களின் வகை மற்றும் தேன் வதைகள், தேனீ வளர்ப்புப் பெட்டிகளின் பாகங்கள், தேனீக்களைப் பிடித்து நிலைப்படுத்தல், கூண்டினுள் அடைத்து வளர்த்தல், வகைப்படுத்தல், ஒரு தேன் கூட்டிலுள்ள கிருமிகள் மற்றும் நோய்கள்.

### III. விவசாயப் பொருளியல் துறைக்கான வினாத்தாள்

01. **விவசாய உற்பத்திகள் பொருளியல் மற்றும் பண்ணைகள் பராமரிப்பு.**- விவசாய உற்பத்திப் பண்ணைகள் பராமரிப்பிலுள்ள முக்கியத்துவம், அடிப்படை எண்ணக்கரு, உற்பத்தித் தொழிற்பாடுகள், உற்பத்தித் தொழிற்பாடுகள் அமைப்பு, உற்பத்திப் பரப்புகள், ஏனைய ISO, ISO உயிர்ச்சாய்வு, ISO வருமான வழிகள், வளங்கள் இணைப்பு

மற்றும் செலவுகளைக் குறைத்தல் பற்றிய கோட்பாடுகள், பிரதியீடு மற்றும் வருமான விளைவுகள், விவசாயத்திலுள்ள ஆபத்து மற்றும் நிச்சயமற்ற தன்மைகள் என்பவற்றுக்கு முகங்கொடுப்பதற்கான உற்பத்தித் தயாரிப்பு நெகிழ்வு மற்றும் பல்லுயிரினத் தன்மை, விவசாயப் பொருட்களுக்கான விசேட விலையை நிர்ணயிக்கும் தத்துவம், தாவரங்கள் மற்றும் விலங்குகள் என்பவற்றின் இணைந்த கூறுகள் பற்றிய மதிப்பீடு, பண்ணை ஸ்தலங்கள் மற்றும் அளவு பயன், கூட்டுப் பண்ணைகளின் முக்கியத்துவம் மற்றும் ஒத்தீட்டு நன்மைகள் பற்றிய கோட்பாடுகள், பண்ணைகளின் பொறிமுறை சார்ந்த சக்தி மற்றும் பலவீனங்கள் முதலிய விடயங்களை நிர்ணயிக்கும் அறிக்கைகளிலுள்ள முக்கியத்துவம் மற்றும் அனுகூலப்படுத்தும் மாதிரிகளில் இந்தத் தகவல்களை உள்ளடக்குதல்.

02. **விவசாய சந்தைப்படுத்தல்.**- சந்தைப்படுத்தல் கோட்பாடுகள் மற்றும் உற்பத்தியினதும், சந்தைப்படுத்தலினதும் ஒத்தீட்டு ரீதியான முக்கியத்துவம், இலங்கையில் சந்தைப்படுத்தல் விடயத்துடன் சம்பந்தப்படும் நிறுவனங்கள், சந்தைப்படுத்தல் வழிமுறைகளின் வளர்ச்சியின் விளைவுகளை ஏற்படுத்துவதில் அத்தகைய நிறுவனங்களின் பங்களிப்புகள், இலங்கையின் விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் எதிர்நோக்குவதற்கு நேரிடுகின்ற பிரச்சினைகள் மற்றும் சந்தைப்படுத்தல் வினைத்திறன் மேம்பாடு பற்றிய கோட்பாடுகள்.

03. **காணிப் பொருளியல்.**- பொருளாதார விஞ்ஞான எண்ணக்கருக்கள், நிலப் பாவனையில் செல்வாக்குச் செலுத்தும் விதங்கள், இலங்கையில் காணிகளுக்கான கேள்வி மற்றும் நிரம்பல், காணிகள் பரிசீலனை விடயங்கள் இலங்கையில் திட்டமிடப்படும் விதங்கள், இலங்கையில் விவசாயக் குடியேற்றங்களைத் தாபித்தல் மற்றும் மக்களைக் குடியேற்றுதல் சம்பந்தமான நிகழ்ச்சித் திட்டங்களின் முக்கியத்துவம்.

12-191

---

## வெளிநாட்டு அமைச்சு

## இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள அலுவலர்களுக்கான 1 ஆம் மற்றும் 2 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2020/(2021)

இலங்கை வெளிநாட்டுச் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான 1 ஆம் மற்றும் 2 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் மாச்சு 2022 இல் கொழும்பிலும் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களிலும் நடைபெறவுள்ளமை அறியத்தரப்படுகிறது. வாய்மொழிப் பரீட்சை கொழும்பில் மட்டும் இடம்பெறும்.

2. மேற்படி இரண்டு வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளையும் ஒரே நேரத்தில் பரீட்சார்த்திகள் தோற்றும் வகையில் நேர அட்டவணை தயாரிக்கப்படும்.

3. **பாடத்திட்டம்.**- 1 ஆம் மற்றும் 2 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளை முறைப்படுத்தும் பாடத்திட்டமும் ஏனைய ஏற்பாடுகளும் அந்தந்த சேவைப்பிரமாணக் குறிப்புக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைகள் மற்றும் வெளிநாட்டு மொழிகள் ஆகியவற்றுக்கான பாடத்திட்டமும் ஏனைய ஏற்பாடுகளும் பின்னிணைப்பு "அ" இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

அலுவலர்கள் வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளுக்கான பாடங்களுக்கு ஒரு தடவை அல்லது பல தடவைகள் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

4. அலுவலர்கள் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய பாடங்கள் பின்வருமாறு :-

| பகுதி II | | |
|---|---|---|
| பாட இல. | பாடம் | காலம் மணித் தியாலம் |
| 03. | அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும் | 03 |
| 04. | இராஜதந்திர செயன்முறை | 03 |
| 05. | சர்வதேச விவகாரங்கள் | 03 |
| 06. | இலங்கை வெளிநாட்டுச் சேவைப் பிரமாணக் குறிப்பு, வெளிநாட்டு அமைச்சு விதிமுறைகள் மற்றும் கணினி அறிவு | 03 |

**1 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை**

| பகுதி I | | |
|---|---|---|
| பாட இல. | பாடம் | நேரம் மணித் தியாலம் |
| 01 | நிதியியல் | 03 |
| | | |

**2 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை**

| பகுதி I | | |
|---|---|---|
| பாட இல. | பாடம் | காலம் மணித் தியாலம் |
| 21. | இலங்கையின் பொருளாதார, சமூக அபிவிருத்தி | 03 |
| 22. | நிருவாகம் | 03 |
| | (அ) அலுவலக முறைமைகள் மற்றும் ஒழுங்கமைப்புசார் முறைமைகள்<br><br>(ஆ) தாபனக் கோவை (தொகுதி I/ தொகுதி II) | |

| பகுதி II | | |
|---|---|---|
| பாட இல. | பாடம் | காலம் மணித் தியாலம் |
| 23. | அடிப்படை அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சர்வதேச சட்டம் | 03 |
| 24. | இராஜதந்திர செயன்முறை | 03 |
| 25. | சர்வதேச விவகாரங்கள் | 03 |

**வெளிநாட்டு மொழிகள்**

| பாட இல. | பாடம் | காலம் மணித் தியாலம் |
|---|---|---|
| 07. | அரபு மொழி | 02 |
| 08. | பிரெஞ்சு மொழி | 02 |
| 09. | ரஷ்ய மொழி | 02 |
| 10. | ஸ்பானிய மொழி | 02 |
| 11. | ஹிந்தி | 02 |
| 12. | சீன மொழி | 02 |
| 13. | ஜேர்மனிய மொழி | 02 |
| 14. | யப்பானிய மொழி | 02 |
| 15. | இத்தாலிய மொழி | 02 |
| 16. | கொரிய மொழி | 02 |

5. வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்களின் கவனத்திற்கென, 1966, செத்தெம்பர் 04 ஆந் திகதியிடப்பட்ட 701 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி கீழே மீளவும் தரப்படுகிறது.

"திணைக்களப் பரீட்சைகள் (பதவி உயர்வு சார்ந்த மற்றும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் உட்பட) பதவி உயர்வு சார்ந்த பரீட்சைகள் மற்றும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளுக்கான மொழி மூலமானது, குறித்த அலுவலர்கள் அரசாங்க சேவையில் சேர்வதற்காக போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழியாக அல்லது அரச கரும மொழியாக இருத்தல் வேண்டும். போட்டிப் பரீட்சையின்றி அடிப்படை ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கும் பட்சத்தில், பதவி உயர்வு சார்ந்த/ வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சைக்கான மொழி மூலமானது, குறித்த அலுவலர் அரசாங்க சேவையில் சேர்வதற்குத் தகைமை பெற்ற மொழியாக அல்லது அரச கரும மொழியாக இருத்தல் வேண்டும்."

5.1 **பரீட்சைப் பெறுபேறுகளை வழங்குதல்.**- பரீட்சார்த்திகள் ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைவதற்கு 40 சதவீதமான அல்லது அதற்கு கூடுதலான புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் 1 ஆம் மற்றும் 2 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளுக்கான பெறுபேறுகள் அடங்கிய இரண்டு வெவ்வேறான பெறுபேற்றுப் பத்திரங்கள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வெளிநாட்டு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

6. பரீட்சார்த்திகள் வெளிநாட்டு மொழிகளுக்கான வினாப்பத்திரங்கள் தவிர்ந்த, சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்திலான வினாப்பத்திரங்களுக்கு விடையளிப்பதற்கான ஒழுங்குகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கென விண்ணப்பித்த மொழி மூலம் பின்னர் மாற்றப்பட மாட்டாது.

7. பரீட்சார்த்தியொருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்தற்ற ஒரு மொழி மூலத்தில் தோற்றியுள்ளார் என்பது பின்னர் கண்டறியப்படின், அவரது பரீட்சார்த்தி நிலை இரத்துச் செய்யப்படும்.

8. விண்ணப்பப்படிவங்கள் இந்த அறிவித்தலுடன் இணைக் கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக ஏ4 அளவானதும், 1 இல் இருந்து 8 வரையுள்ள விடயங்களை முதலாம் பக்கத்தில் கொண்டுள்ளதும், மீதி விடயங்களை 2 ஆம் பக்கத்தில் கொண்டுள்ளதுமான தாளொன்றில் தயாரிக்கப்பட வேண்டும். தாளின் இரு பக்கங்களும் பயன்படுத்தப்பட வேண்டும். விண்ணப்பங்கள் விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் தெளிவாக தயாரிக்கப்படுதல் வேண்டும். சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலத்தில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்களில் பரீட்சையின் பெயர் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும். இரண்டு பரீட்சைகளுக்கும் தோற்றும் பரீட்சார்த்திகள் ஒவ்வொரு பரீட்சைக்கும் தனித்தனியான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பங்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்படாத மற்றும் தேவையான விபரங்களைக் கொண்டிருக்காத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படும் என்பதால், விண்ணப்பதாரர் குறித்த விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். விண்ணப்பத்தை அனுப்புவதற்கு முன் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பமானது பரீட்சை தொடர்பில் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துடன் ஒத்துள்ளதா என்பதனையும், அதில் தரப்பட்டுள்ள அனைத்து விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பதனையும், பற்றுச்சீட்டு அதில் ஒட்டப்பட்டுள்ளதா என்பதையும் விண்ணப்பதாரர் சரிபார்ததுக் கொள்ள வேண்டும்.

8.1 **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை.-** விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும் போது சரியான தகவல்களை வழங்குவதில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின்படி விண்ணப்பதாரரொருவர் பரீட்சைக்கு முன்னரான எந்த நேரத்திலும் அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ தகுதியற்றவரெனக் கண்டறியப்படுமிடத்து, அவரது பரீட்சார்த்தி நிலையானது இரத்துச் செய்யப்படக்கூடும்.

9. பரீட்சைகள், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன், பரீட்சையை நடாத்தும் பொருட்டு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதித்துரைக்கப்படும் விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாக இருப்பர். பரீட்சை நடைமுறை மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்பட்டவராவர். அத்தகைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் மீறப்படும் பட்சத்தில், பரீட்சார்த்தியானவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக்கப்படுவார்.

10. அனைத்து விண்ணப்பதாரிகளும் தமது விண்ணப்பங்களை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கும் பொருட்டு அவற்றை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மனித வளங்கள் மற்றும் தூதரக முகாமைத்துவப் பிரிவுக்கு 2021.12.31 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அனுப்பி வைத்தல் வேண்டும். வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் பணியாற்றுவோர் தமது விண்ணப்பங்களை தூதரகத் தலைவர்கள் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும். முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் எந்தவொரு விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.

11. தகைமைகள் படைத்தோர் மாத்திரமே விண்ணப்பித்துள்ளாரென்ற அனுமானத்தின் பேரில், விண்ணப்ப முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களையும் இணைக்கப்பட்டுள்ள அறிவித்தலின் பிரகாரம் தேவையான பரீட்சைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டதற்கான பற்றுச் சீட்டுக்களையும் விண்ணப்பத்துடன் இணைத்துள்ள அனைத்து விண்ணப்பதாரிகளுக்குமான அனுமதி அட்டைகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும். அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன், பத்திரிகைகளில் அது பற்றிய அறிவித்தலொன்று பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். மேற்படி அறிவித்தல் பத்திரிகைகளில் பிரசுரமாகி 02 அல்லது 03 நாட்கள் கடந்த பின்னரும் பரீட்சார்த்திக்கான அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிட்டால், குறித்த விண்ணப்பம் மற்றும் அனுப்பி வைத்தமைக்கான (பரீட்சைக் கட்டணத்துடன் சம்பந்தப்பட்ட) பற்றுச்சீட்டு ஆகியவற்றின் நிழற்படப் பிரதிகளுடன், தொடர்பு கொள்ளக் கூடியதாக ஒரு தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு ஒரு கடிதத்தை பரீட்சைகள் ஆணையாளர் திணைக்களத்திற்கு தொலைநகல் மூலம் அனுப்பி, அனுமதி அட்டையின் பிரதியை தொலைநகல் மூலம் தனக்கு வழங்குமாறு கோரிக்கை விடுத்தல் பயனுறுதியுடையதாகவிருக்கும்.

11.1 விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டையொன்று வழங்கப்படுதலானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வேண்டப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதாகவோ அல்லது குறித்த பதவிக்குத் தகுதியுடையவர் என்பதாகவோ கருதப்படலாகாது.

11.2 விண்ணப்பதாரர் விண்ணப்பத்திலும், அனுமதி அட்டையிலும் தனது கையொப்பத்தையிட்டு, அதை நிறுவனத் தலைவராலோ அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவராலோ அத்தாட்சிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

12. மேலேயுள்ள 11 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளைப் பின்பற்றத்தவறி, அதன் பின்னர் பரீட்சார்த்திகளால் மேற்கொள்ளப்படும் மேன்முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. பரீட்சார்த்திகள் தமக்கென குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தனது கையொப்பத்துடன் கூடிய, சான்றுப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். தமது அனுமதி அட்டையினை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

13. பரீட்சை நிலையத்தில் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கென பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச் சீட்டு;
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

*14.* முதல் தடவையாக குறித்த பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படும் அதேவேளை, தொடர் அமர்வுகளுக்கான பரீட்சைக் கட்டணங்கள் பின்வரும் அடிப்படையில் அமையும் :

(அ) முதலாவது அமர்வுக்கு (முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் பகுதிக்கும்) கட்டணமில்லை.

(ஆ) ஒவ்வொரு தொடர் அமர்வுக்கும்

| | ரூபா சதம் |
|---|---|
| முழுப் பரீட்சைக்கு | 1,200.00 |
| ஒரு பாடத்திற்கு | 600.00 |

பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 20-03-02-13 எனும் வருமானத் தலைப்பின் கீழ் அரசாங்க வருமானத்தில் வரவு வைக்கப்படும் வகையில், நாட்டில் உள்ள எந்தவொரு தபால் அல்லது உப தபால் அலுவலகத்தில் அல்லது வெளிநாட்டுத் தூதரகத்தில்/ துணை அலுவலகத்தில் பணம் செலுத்தி, விண்ணப்பதாரரின் பெயரில் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் உறுதியாக ஒட்டுதல் வேண்டும்.

பரீட்சைக் கட்டணங்களுக்கு மேலதிகமாக வேறெந்தக் கட்டணங்களும் அறவிடப்படமாட்டாதென்பதை அறிவித்துக் கொள்ளப்படுகிறது. பரீட்சைக் கட்டணங்கள் தொடர்பில் காசுக் கட்டளைகளோ முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்களை எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படவோ அல்லது வேறொரு பரீட்சைக்காக மாற்றப்படவோ முடியாது. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை பரீட்சார்த்தி தன்வசம் வைத்திருத்தல் பயனுள்ளது.

15. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத எந்த விடயம் தொடர்பிலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியானதாகும். பரீட்சைகள் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும்.

*16.* சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிவித்தலின் வெவ்வேறு வாசகங்களுக்கிடையே மாறுபாடோ முரண்பாடோ காணப் படுமிடத்து, சிங்கள அறிவித்தலே நடப்பில் இருக்கும்.

அட்மிரால் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே,
செயலாளர்/ வெளிநாட்டு அமைச்சு.

வெளிநாட்டு அமைச்சு,
குடியரசுக் கட்டிடம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வெளிநாட்டு அமைச்சு**

(அலுவலக பாவனைக்கு மட்டும்)

**இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள அலுவலர்களுக்கான 1 ஆம், 2 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை மற்றும் இரண்டாவது மொழிப் பரீட்சைகள்-2020 (2021)**

விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் (பொருத்தமான இலக்கத்தை பெட்டிக்குள் இடுக.)

மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டில் இடுக)

1. விண்ணப்பித்த பரீட்சை :

(உரிய இலக்கத்தைப் பெட்டிக்குள் இடுக.)

| பரீட்சை | உரிய இல. |
|---|---|
| வினைத்திறன் காண் தடை தாண்டல் - 1 | 1 |
| வினைத்திறன் காண் தடை தாண்டல் - 2 | 2 |
| வெளிநாட்டு மொழி | 3 |

2. (அ) (i) முழுப் பெயர் (ஆங்கில முதலெழுத்துக் களில்) :--------------------------------.

(iii) முழுப் பெயர் (தமிழில்/சிங்களத்தில்) :-----
-------------------------------------.

3. முகவரி (அனுமதி அட்டை அனுப்புவதற்காக) :----.
(ஆங்கிலப் பேரெழுத்துக்களில்) :----.

4. பிறந்த திகதி:-

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

5. தேசிய அடையாள அட்டை இலக்கம்:-

☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

6. கையடக்க தொலைபேசி இல.:

☐☐☐☐☐☐☐☐☐☐

7. பால் :-
ஆண் -0, பெண் -1 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டில் இடுக)

8. இலங்கை வெளிநாட்டுச் சேவையில் நியமனத் திகதி :

வருடம் : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

9. தற்போதைய பதவி :----.

10. இந்த அறிவித்தலின் 4 ஆம் பந்தியில் தரப்பட்ட பரீட்சைக்குரிய பாட எண்களைச் குறிப்பிடவேண்டும் (விண்ணப்பத்தில் குறிப்பிட்ட பாடங்களுக்குத் தோற்று வதற்கு மட்டும் பரீட்சார்த்தி அனுமதிக்கப்படுவார்) :

| பாடம் | பாட இல. |
|---|---|
| (i) | |
| (ii) | |
| (iii) | |
| (iv) | |
| (v) | |
| (vi) | |

11. பரீட்சார்த்தி முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு முன்னர் தோற்றியிருந்தாரா என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறெனில் பரீட்சைச் சுட்டெண், பாடங்கள், வருடம் மற்றும் மாதம் என்ப வற்றைக் குறிப்பிடுக :----.

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவை யெனவும் மேற்குறிப்பிட்ட மொழி மூலம் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் தகுதியுடையவராவேன் எனவும் நான் வெளிப்படுத்துகின்றேன். மேலும், இந்தப் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதித்துரைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப செயற்படுவதற்கு நான் இணக்கம் தெரிவிக்கின்றேன்.

பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டதற்கான ........... ஆம் இலக்கப் பற்றுச்சீட்டும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

செலுத்தப்பட்ட கட்டணம் ரூபா ...........................

----,
விண்ணப்பதாரர் கையொப்பம்

திகதி:----.

பரீட்சைக் கட்டணம் :

(i) கட்டணம் செலுத்திய தபால் அலுவலகம்/ உப தபால் அலுவலகம்/ வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் :----.

(ii) செலுத்திய தொகை :----.

(iii) திகதி :----.

(iv) பற்றுச்சீட்டு இல. :----.

| |
|---|
| பற்றுச்சீட்டின் மூலப்பிரதி இங்கே ஒட்டப்பட வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருக்கலாம்.) |

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,

மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் சரியானவை எனவும் விண்ணப்பதாரரான திரு./ திருமதி/ செல்வி ........................ ............. என்பவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலமாக இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு அவர் தகுதியுடையவர் என்பதை நான் உறுதிப்படுத்துகின்றேன். மேலும் அவரது கையொப்பத் தையும் அவர் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்பதனையும் பற்றுச்சீட்டை இணைத்துள்ளார் என்பதனையும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவியும்.

திகதி:----.
(உத்தியோகபூர்வ முத்திரை).

**பின்னிணைப்பு 'எ'**

1. **1 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை**:

1.1 முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் உத்தியோகத்தர்கள் ஒரே அமர்வில் அல்லது வெவ்வேறான அமர்வுகளில் இப்பரீட்சைக்குத் தோற்றலாம்.

1.2 இப்பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :

**பகுதி I**

(i) *நிதியியல்* - நிதியியல் தொடர்பான பரீட்சை பின்வரும் விடயப்பரப்புக்கள் அடிப்படையில் அமையும் :

(அ) இலங்கை அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் - பகுதி I (அத்தியாயம் X நீங்கலாக)

(ஆ) நடைமுறை ஆண்டின் மதிப்பீடுகள். உ-ம் : அவற்றின் ஒழுங்குகள், வருமானத் தலைப்புகள், நிதி மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டங்கள்

(இ) செயலகங்கள் (கச்சேரிகள்) மட்டத்தில் கையாளப்படும் குறிப்பிட்ட கணக்குகள் தொடர்பான கட்டளைச் சட்டங்கள்.

(ii) *இலங்கையின் வரலாறும் புவியியலும்* :

**பகுதி II - சிறப்பு தேர்வுத்தாள்கள்**

(i) அடிப்படை அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சர்வதேச சட்டம்
(ii) இராஜதந்திர செயன்முறை
(iii) சர்வதேச விவகாரங்கள்
(iv) இலங்கை வெளிநாட்டுச் சேவை நடவடிக்கைக்குறிப்பு, வெளிநாட்டு அமைச்சு ஒழுங்குவிதிகள் மற்றும் கணினி அறிவு

1.3 மேற்படி தேர்வுத்தாள்கள் ஒவ்வொன்றும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்டிருப்பதுடன், சித்தியடைவதற்கு பரீட்சார்த்திகள் ஒவ்வொரு தேர்வுத்தாளிலும் 40% வீதமான அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற வேண்டும்.

1.4 உத்தியோகத்தர் ஒருவர், ஒவ்வொரு தேர்வுத் தாளுக்கும் தனித்தனியாகப் பல தடவைகள் தோற்று வதற்கு அனுமதிக்கப்படுவதுடன், ஒவ்வொரு தேர்வுத் தாளுக்கும் அவர் தகுதியான புள்ளிகளைப் பெற்றதும் அத்தேர்வில் சித்தியடைந்ததாகக் கருதப்படுவார்.

**2. 2 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை :**

2.1 2 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாக அமைவதுடன் உத்தியோகத்தர்கள் ஒரே அமர்வில் அல்லது வெவ்வேறான அமர்வுகளில் இரு பகுதிகளுக்கும் தோற்றலாம்.

2.2 பின்வரும் பாடங்களில் பரீட்சை நடாத்தப்படும் :

**பகுதி I**

(i) இலங்கையின் பொருளாதார, சமூக அபிவிருத்தி
(ii) நிருவாகம் - இது பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்:

(அ) அலுவலக முறைமைகளும் ஒழுங்கமைப்பு முறைமைகளும்.

(ஆ) தாபன விதிக் கோவை - தொகுதி I மற்றும் தொகுதி II

**பகுதி II - சிறப்பு தேர்வுத்தாள்கள்**

(i) அடிப்படை அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சர்வதேச சட்டம்
(ii) இராஜதந்திர செயன்முறை
(iii) சர்வதேச விவகாரங்கள்

2.3 மேற்படி தேர்வுத்தாள்கள் ஒவ்வொன்றும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்டிருப்பதுடன், சித்தியடைவதற்கு பரீட்சார்த்திகள் ஒவ்வொரு தேர்வுத்தாளிலும் 40% வீதமான அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறவேண்டும்.

2.4 உத்தியோகத்தர் ஒருவர், ஒவ்வொரு தேர்வுத்தாளுக்கும் தனித்தனியாகப் பல தடவைகள் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவதுடன், ஒவ்வொரு தேர்வுத்தாளுக்கும் அவர் தகுதியான புள்ளிகளைப் பெற்றதும் அத்தேர்வில் சித்தியடைந்ததாகக் கருதப்படுவார்.

**குறிப்பு:-**

(i) அரசியலமைப்புச் சட்டம் தொடர்பான வினாக்கள் பிரதானமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பிற்கான விசேட குறிப்புகளை உள்ளிட்டு இலங்கை அரசின் பாராளுமன்ற முறைமையை உள்ளடக்கியிருக்கும்.

(ii) சர்வதேச சட்டம் தொடர்பான வினாக்கள் நாடுகளுக்கிடையிலான உறவுகள், இருதரப்பு மற்றும் பல்தரப்பு உடன்படிக்கைகள் இன்னும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட நாடுகளின் கடமைகள் மற்றும் உரிமைகள், தூதுவராலயச் சட்டம் மற்றும் உடன்படிக்கைகளுக்கான சட்டம் என்பவற்றை உள்ளடக்கியிருக்கும்.

(iii) சட்டத்தரணியாக விளங்கும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து சட்டத்துறையில் பட்டமொன்றைப் பெற்று விளங்கும் உத்தியோகத்தர் ஒருவர், அவர் உரிய பரீட்சையில் அப்பாடங்களில் சித்தியொன்றைப் பெற்றுள்ளார் எனக்கருதி அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும் எனும் வினாத்தாளுக்கு அவர் தோற்றுவதிலிருந்து விலக்களிக்கப்படுவார்.

**3. வெளிநாட்டு மொழிகள் :**

3.1 வெளிநாட்டு மொழிகள் :

(i) அரபு மொழி
(ii) பிரஞ்சு மொழி
(iii) ரஷ்ய மொழி
(iv) ஸ்பானிய மொழி
(v) ஹிந்தி மொழி
(vi) சீன மொழி
(vii) ஜேர்மன் மொழி
(viii) யப்பான் மொழி
(ix) இத்தாலிய மொழி
(x) கொரிய மொழி

3.2 மேற்குறிப்பிட்ட வெளிநாட்டு மொழிகள் மீதான எழுத்துப்பரீட்சை ஒவ்வொன்றும் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டிருக்கும். பரீட்சார்த்திகள் சித்தியடைவதற்கு ஒவ்வொரு தேர்விலும் 40 சதவீதம் அல்லது அதற்கு அதிகமான புள்ளிகள் பெற வேண்டும்.

## கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் III ஆம் வகுப்பிற்கு இணைத்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2021

1.0 கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் III ஆம் வகுப்பிற்கு இணைத்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையினை பெப்புருவரி 22 ஆந் திகதி பரீட்சை ஆணையாளரினால் நடாத்துவதற்கு இவ்வறிவித்தலின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் படி விண்ணப்பப்படிவத்தினை இலங்கை பரீட்சை திணைக்களத்தின் www.doents.lk என்ற வெப்தளத்தில் "our service" என்ற தலைப்பின் கீழ் "Online Application – Recruitment Exam" இன் மூலம் வெளியிடப்பட்ட முறையின் மூலம் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். பின்னர் அதனை தரவிரக்கம் செய்ததன் பின்னர் அதன் பிரதியை உரிய பகுதிகளை சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தப்பட்டு கையெழுத்திடப்பட்டப் பின்னர் நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு இறுதி திகதிக்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர், நிறுவன பரீட்சை பிரிவு, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு பதிவு தபாலின் மூலம் அனுப்புதல் வேண்டும். (விண்ணப்பப்படிவத்தின் பிரதியினை தம் வசம் வைத்துக்கொள்ள வேண்டும்) விண்ணப்பத்தின் மேல் பக்க மூலையில் "கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை III ஆம் வகுப்பிற்கு சேர்த்துக்கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை 2021" என்று மிகவும் தெளிவாக குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியானது 2021, திசெம்பர் 31 ஆந் திகதியாகும்.

**குறிப்பு**.- அச்சிடப்பட்ட பிரதியினை தபால் மூலம் அனுப் பப்படுதல் கட்டாயமாகும். அவ்வாறு அனுப்பப் படுதலில் தாமதம் ஏற்படல் மற்றும் தொலைந்து போதல் சம்பந்தமாக செய்யப்படும் முறைபாடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்கள் அனுப்பப்படாமல் இருக்கும் பொறுப் பினை விண்ணப்பதாரிகள் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

2.0 பரீட்சை ஆணையாளர் மூலம் நடாத்தப்படும் இந்த எழுத்து பரீட்சையின் பெறுபேறுகளின்படியும் திறமை களினை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் III ஆம் வகுப்பிற்கு தேர்ந்தெடுக்கப்படுவர்.

3.0 இங்கு நிரப்பப்படவேண்டிய மொத்த வெற்றிடங்களுக் கான எண்ணிக்கை 21 ஆகும். நியமன வலுவிற்கு வரும் தினம் பற்றி நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். எந்தவொரு வெற்றிடத்தினையும் நிரப்புதல் அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பப்படாமல் இருப்பதும் நியமன அதிகாரியின் முடிவாகும்.

4.0 இந்த பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுபவர்களில் 3% வீதமானவர்கள் அங்கவீனமானவர்களுக்காக ஒதுக் கப்பட்டுள்ளது. பரீட்சையின் போது அங்கவீனர் களின் திறமையடிப்படையிலும் அதிகமாக பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளியடிப்படையிலும் 3% வீதமான வர்கள் தேரந்தெடுக்கப்படுவர். தேர்ந்தெடுக்கப்படு பவர்கள் 50% வீதமான புள்ளிகளை பெற்றிருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் விசேட வைத்திய குழுவின் மூலம் வைத்தியசான்றிதழ் பெறப்படுவதற்காக அனுப்பப்பட்டு வைத்திய சான்றி தழில் அங்கவீனம் சம்பந்தமாகவும் பணியில் ஈடுபடுத்தும் போது அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் இல்லை எனவும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

5.0 வேதனம் 2016.02.25 தினத்தின் அரச நிர்வாக சுற்றறிக்கையின் 03-2016 (MN-032016) படி கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் வகுப்பு III க்கான மாதாந்த வேதனம் ரூபா 31,040- 10 × 445 – 10× 660 – 10 × 730 – 10 × 750 ரூபா 57,550 ஆகும்.

6.0 இந்த நியமனம் நிரந்தரமாகும். இந்த பரீட்சையில் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் III ஆம் வகுப்பிற்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர் ஓய்வூதியம் பெறக்கூடியதாகவும் அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை தீர்மானங்களின் படியும் உத்தியோகத்தர் கீழ்படிதல் வேண்டும்.

7.0 **தகைமைகள்**.- கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர் III ஆம் வகுப்பிற்கு தேவையான தகைமைகள் கீழ்வருமாறு :

(அ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்ட தினத் தில் விண்ணப்பதாரியின் 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அதன்படி 2003.12.31 ஆந் திகதியிலோ 1991.12.31 ஆந் திகதிக்கு பின்னரோ பிறந்தவர்கள் மாத்திரம் விண்ணப் பிக்க முடியும்.

**குறிப்பு**.-

அரசாங்க சேவையில் ஏற்கனவே உள்ளவர்கள் இந்த பரீட்சையின் மூலம் இணைத்துக் கொள்ளும் போது அவர்களுடைய வயதெல்லை 45 ஆக கவனத்திற்கெடுத்துக்கொள்ளப் படும். இருப்பினும் அரச சேவையில் நிரந்தர பதவியில் உள்ளவர்கள் 2003.12.31 ஆந் தினத்தில் அல்லது அதற்க முன்னர் மற்றும் 1976.12.31 ஆந் தினத்திற்கு பின்னர் பிறந்தவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்;

(இ) விசேட நற்குணங்களை கொண்டவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையினுள் எந்த பிரதேசத்திலும் பணியாற்றக்கூடிய தேக ஆரோக்கியம் மற்றும் நல்ல மனநிலையுடைய வராகவும் இருத்தல் வேண்டும்.

(உ) கல்வித்தகைமை :

(1) சிங்களம், தமிழ், ஆங்கில மொழி, கணிதம் உட்பட வேறு பாடங்களில் 02 பாடங்கள் சித்தியடைந்திருப்பதுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(2) பொருளியல், விஞ்ஞானம், கணக்கியல், வியாபார புள்ளிவிபரவியல், வர்த்தகவியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதத்தில் ஒரு பாடத்தில் க. பொ. த. (உயர் தரத்தில்) அனைத்து பாடங்களிலும் (சாதாரண பரீட்சையை தவிர) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். (பழைய பாடத்திட்டத்தின்படி ஒரே முறையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

(3) தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் உயர் கணக்கியல் அல்லது கணக்காய்வு முகாமைத்துவம் சம்பந்தமாக டிப்ளோமா சித்தியடைந்திருத்தல்.

அல்லது

கணக்கீட்டு தொழில்நுட்ப பாடத்திட்டத்தில் இறுதி கட்டத்தில் சித்தியடைந்திருத்தல் அல்லது அதற்குச் சமமான தகைமையினைக் கொண்டிருத்தல்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் கணக்கீடு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பாடநெறியில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.-

(1) சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்கு உரிய தகைமைகளை விண்ணப்பம் பொறுப்பேற்ற தினத்திலோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

8.0 பரீட்சை ஒழுங்கு விதி மற்றும் பாடத்தின் அங்கீகாரமும் :

8.1 பரீட்சை வினாப் பத்திரம் இரண்டில் சித்தியடைய வேண்டும். இப்பரீட்சையில் கோரப்பட்ட தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழி மூலம் மாத்திரம் பரீட்சைக்கு அமர முடியும். மொழி மூலத்தினை எவ்வித காரணம் கொண்டும் பின்னர் மாற்ற முடியாது.

8.2 பரீட்சை பாடங்கள் மற்றும் புள்ளி வழங்கும் முறை பின்வருமாறு வழங்கப்படல் வேண்டும்.

| பாடங்கள் | உச்ச புள்ளி | காலம் | சித்தி புள்ளி |
|---|---|---|---|
| (1) பொது உளச்சார்பு | 1 மணித்தி யாலம் | 100 | 40 |
| (2) பொது அறிவு | 1 மணித்தி யாலம் | 100 | 40 |

8.3 (1) பொது உளச்சார்பு : விண்ணப்பதாரியின் எண்ணக்கரு, தர்க்க ரீதியான விடயங்கள் புள்ளிவிபரம் நியாயப்படுத்தல், சுருக்கமாக விடை எழுதுதல் போன்ற விடயங்கள் அடங்கிய 50 வினாக்கள்.

(2) பொது அறிவு :

(அ) தேசிய மற்றும் சர்வதேச சமூக பொருளாதாரம் சம்பந்தமானதும் அரசியல் சம்பந்தமானதும்.

(ஆ) தேசிய மற்றும் சர்வதேச கூட்டுறவு சம்பந்தமான சுட்டிகள் மற்றும் வர்த்தகம் சம்பந்தமான அறிவு நியாயப்படுத்தல் சம்பந்தமான சிறு விளக்கம் போன்றவை அடங்கிய 50 வினாக்கள்.

**குறிப்பு**.- பணியில் ஈடுபடும் விண்ணப்பதாரியின் திறமையினை கண்டறியவும் பரீட்சிக்கவும் இந்த கேள்விப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. இது போட்டிப் பரீட்சையாகக் காணப்படுவதால், ஒவ்வொரு விடயம் சம்பந்தமாக ஒதுக்கப்பட்ட புள்ளிகளின் கீழ் 40 வீதமானவற்றை விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ள வேண்டும். எழுத்து மூலமான பரீட்சையில் பிழைகள், நேர்த்தியற்ற கையெழுத்து போன்றவற்றுக்கு புள்ளிகள் குறைக்கப்படும். போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நியமனம் வழங்கப்படும்.

8.4 வெற்றிடத்துக்குச் சமமான எண்ணிக்கையினை உள்வாங்குவதற்கான பெயர் விபரத்துடன் பரீட்சையின் பெறுபேறு அடங்கிய ஆவணத்தினை பரீட்சைய ஆணையாளரின் மூலம் கூட்டுறவுச் சங்க ஆணையாளருக்கு அனுப்பப்படும். அத்துடன் பரீட்சை எழுதிய பரீட்சார்த்தி அனைவருக்கும் தனிப்பட்ட ரீதியாக அனுப்புவதற்கும் இலங்கைப் பரீட்சை திணைக்களம் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் www.results.exam.gov.lk என்ற இணையத் தளத்தின் மூலமாக வெளியிடுவதற்கம் நடவடிக்கை எடுக்கப்படும்.

**நேர்முகப் பரீட்சை.-** எழுத்து மூலமான அனைத்துக் கேள்விகளுக்கும் விடையளித்த விண்ணப்பதாரிகளில் போதுமான உயர் புள்ளிகள் பெற்றுக்கொண்டவர்களின் தகுதி நிலையினை ஆராய்வதற்கான நேர்முகப்பரீட்சை நடைபெறும். இப்பரீட்சை நடைபெறும் தினம் சம்பந்தமாக கூட்டுறவு ஆணையாளர் மற்றும் பதிவாளரினால் தீர்மானிக்கப்படும்.

9.0 **பொய்யான விடயங்கள் வழங்குதல் மற்றும் அதற்கான தண்டனை.-** விண்ணப்பங்களை பூரணப்படுத்தும் போது சரியான தகவல்கள் வழங்கப்படுதல் வேண்டும். இந்த தகவல்கள் சட்டரீதியற்ற முறையில் தகுதியற்றவை என பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கண்டுபிடிக்கப்பட்டால் அவருடைய விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். மேலும் எச்சந் தர்ப்பத்திலாவது சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் பிழை யெனக் கண்டுபிடிக்கப்பட்டால் அவருடைய சேவை முடி வுறுத்தப்படும்.

10.0 **பரீட்சைக் கட்டணம்.-**

(அ) பரீட்சைக் கட்டணமான ரூபா 600.00 செலுத்தப்படும் போது கீழ்வரும் ஒன்லைன் மூலமான முறையின் கீழ் செலுத்தப்படல் வேண்டும்.

(i) எந்தவொரு வங்கியினதும் கடன் அட்டை மூலமாக

(ii) எந்தவொரு வங்கியினதும் வரவு அட்டை மூலம் இன்றநெட் வசதி கொண்ட முறையின் மூலம்

(iii) இலங்கை வங்கியின் online முறை மூலமாக (Bank of Ceylon online Banking Method)

(iv) எந்தவொரு இலங்கை வங்கி கிளையின் மூலமாக (Bank of Ceylon slip payments)

(v) தபால் திணைக்களத்தின் எந்தவொரு கிளைகளின் மூலமாக (Postal Department payment at any post office)

**குறிப்பு.-** மேற்குறிப்பிட்ட பணம் செலுத்தும் முறை சம்பந்தமான விடயங்கள் இணையத்தளம் மூலமாக வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) பணம் பெற்றுக்கொண்டதை உறுதிப் படுத்துவதற்காக குறுஞ்செய்தி மூலமாக அல்லது (SMS) ஈமெயில் மூலமாகவோ அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணம் சம்பந்தமாக குறிப்பிட்ட பணம் செலுத்தப்படல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் குறைத்தோ அல்லது அதிக மாகவோ செலுத்தப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட முறை யின் மூலம் பணம் செலுத்தும் முறையில் ஏற்படும் பாதிப்புக்கள் சம்பந்தமாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்கமாட்டாது.

(இ) இப்பரீட்சை சம்பந்தமாக செலுத்தப்படும் தொகை எந்தக் காரணங்களைக் கொண்டும் மீண்டும் வழங்கப்படமாட்டாது அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றம் செய்ய முடியாது.

11.0 **விண்ணப்பம் அனுப்பப்படவேண்டிய முறை.-** ஒன்லைன் பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழிமூலமாக மாத்திரம் பூரணப்படுத்தல் வேண்டும். விண்ணப்பதாரியினால் ஒன்லைன் மூலமாக அனுப்பப்பட்ட விண்ணப்பத்தின் அச்சுப்பிரதியினை பதிவுத்தபாலின் மூலம் அனுப்பிய பின்னர் இரண்டு பதிவுகளும் கிடைக்கப்பெற்ற பின்னர் உறுதிப்படுத்துவதன் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது அல்லது ஏற்றுக்கொள்ளப்படவில்லை என பாவனையில் உள்ள தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி மூலம் அல்லது ஈமெயில் மூலமாக அனுப்பப்படும். ஒன்லைன் சம்பந்தமான அறிவுறுத்தல்களை தரவிறக்கம் செய்து கொள்ளவும்.

விண்ணப்பப்பத்திரம் பூரணப்படுத்தும் போது அறிவுறுத்தல் பத்திரத்தை பின்பற்றவும். விண்ணப்பப் படிவத்தின் ஒன்லைன் பிரதியை அனுப்பபட்ட பின்னர் அதில் எவ்வித மாற்றத்தினையும் மேற்கொள்ள முடியாது. பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

12.0 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டப்படி இதற்கு விண்ணப்பித்த தகுதியானவர்களும் உரிய தினத்திற்கு முன்னர் பணத்தை செலுத்தியுள்ளோருக்கும் பரீட்சையில் அமருவதற்கான அனுமதி அட்டையினை பரீட்சை ஆணையாளரின் மூலமாக அனுப்பப்படும். அனுமதி அட்டை வழங்கப்பட்ட பின்னர் இந்தப் பதவிக்கு உரிய தகுதியினைப் பெற்றுள்ளார் என கருத்திற்கொள்ளலாகாது. விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சைக்குக் கோரப்படும் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தகுதியுடையவரா எனப் பரீட்சிக்கப்பட்டு தேவையான தகுதி இல்லையென உறுதிப்படுத்தப்பட்டால் அத்தகுதி நிராகரிக்கப்படும்.

13.0 விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் III ஆம் வகுப்புக்கு இணைத்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை 2021 எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

14.0 விண்ணப்பப்படிவத்தின்படி பரீட்சை சம்பந்தமாக அனுமதி அட்டையில் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். ஏதாவது அரச நிறுவனங்கள் சார்பாக விண்ணப்பிக்கப் பட்டிருப்பின் நிறுவன அதிகாரியின் மூலமாகவோ அல்லது அவ்வாறு இல்லையெனின் அவர் சார்பாக அதிகாரம் வழங்கப்பட்டவரோ அல்லது அரசாங்க பாடசாலையின் அதிபர் மூலமாகவோ ஓய்வூதியம் பெறுபவரோ, கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்திய பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைத்தலைவர், அதிகார சபை தலைவர், அரச மற்றும் மாகாண சேவையின் நிரந்தர பணிபுரியும் உத்தியோகத்தர், பௌத்த விகாராதிபதி, வேறு மத தலைவர்கள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

15.0 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2021, திசெம்பர் மாதம் 03 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

பரீட்சை ஆணையாளர்,
பரீடசை ஒழுங்கமைப்புப் பிரிவு,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு.

16.0 **பரீட்சைக்கு சமுகமளித்தல்**.- விண்ணப்பதாரிக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டது சம்பந்தமாக பத்திரிகை மூலமான அறிவித்தல் வழியாக இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் மூலம் வெளியிடப்பட்டிருக்கும். பத்திரிகையில் வெளியிட்டதன் பின்னர் 2 அல்லது 3 நாட்களின் பின்னர் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் விளம்பரத்தில் குறிப்பிட்டதன்படி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துடன் விசாரணை செய்ய முடியும். அந்த விசாரணையின் போது விண்ணப்பதாரி விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம், முகவரி போன்றவற்றை பிழையின்றி அறிவித்தல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்பிற்கு வெளியே வசிப்ப வராயின் தொலைநகல் இலக்கத்தினை குறிப்பிட்டு அவருடைய அனுமதி அட்டை கிடைக்கத்தக்கதாக விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட பெக்ஸ் இலக்கத்துடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளுதல் பயனுள்ளதாக அமையும். அந்த விசாரணையின் போது பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டண ரசீது பதிவுத் தபால் பற்றுச்சீட்டு போன்றவற்றை தம்வசம் வைத்திருப்பின் அவற்றை இதனுடன் இணைப்பது பயனுள்ளதாக அமையும்.

16.1 பரீட்சை சம்பந்தமாக சமுகமளிக்கும் முதல் நாளில் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரியிடம் தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

17.0 விண்ணப்பதாரி தமது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்துவதன் பொருட்டும் பரீட்சை நிலைய அதிகாரி திருப்தியடையும் வகையிலும் ஒவ்வொரு விடயங்களுக்கும் தனது கையொப்பத்தினை உறுதிப் படுத்தல் வேண்டும். அது சம்பந்தமாக கீழ்வரும் எழுத்து மூலமான ஆவணம் கையளிக்கப்படல் வேண்டும்.

(i) தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம்.

இதன்படி விண்ணப்பதாரி அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்காக முகத்தினையும் காதுகளையும் மறைக்காமல் பரீடசை மண்டபத்திற்குள் செல்லுதல் வேண்டும். ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தாத விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்குள் செல்வது தடை செய்யப்படும். அத்துடன் பரீட்சை மண்டபத்தில் அனுமதிக்கப்பட்ட நேரத்திலிருந்து முடியும் வரை பரீட்சை மண்டபத்தில் விண்ணப்பதாரி அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்காக முகத்தினையும் காதுகளையும் மறைக்காமல் வைத்திருத்தல் வேண்டும்.

18.0 பரீட்சை நடாத்துவது சம்பந்தமாகவும் பரீட்சைப் பெறுபேறு வெளியிடுவது சம்பந்தமாகவும் பரீட்சை ஆணையாளர் மூலம் எடுக்கப்படும் சட்டதிட்டங்களின் கீழ் விண்ணப்பதாரி கீழ்ப்படிதல் வேண்டும். இந்தச் சட்டதிட்டம் மீறப்படும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளரினால் எடுக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாக்கப்படுவார்.

19.0 இதில் குறிப்பிடப்படாத விடயங்கள் காணப்படுமாயின் அது சம்பந்தமாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் சங்கங்களின் ஆணையாளர் மூலம் தீர்மானம் எடுக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட சட்டதிட்டங்களுக்கு உள்வாங்கப்படல் வேண்டும்.

20.0 இங்கு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம் வெளியிடப்படும் அறிவித்தலில் ஏதாவது ஒவ்வை காணப்படுமாயின் சிங்கள மொழிமூலமான அறிவித்தல் வலுவில் இருக்கும்.

கமானி என். லியனாராச்சி,
ஆணையாளர் கூட்டுறவு அபிவிருத்தி
திணைக்களம்,
சங்கங்களின் பதிவாளர் (உதவி).

2021, நவெம்பர் 23.

**Department of Examinations, Sri Lanka**

**OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO COOPERATIVE DEVELOPMENT OFFICER - III OF THE DEPARTMENT OF CO-OPERATIVE DEVELOPMENT - 2021**

(1) Medium applied for the examination

(I) The medium applied for the exam (Candidates should appear for the examination only through the medium mentioned here) :.........................................................

(2 ) Personal Information

(I) Name in Full (in English Block Capitals) : ...........................................................................

(II) Name with initials at the end (In English Block Capitals) :.........................................................

(III) Postal Town of the Current Address (In English Block Capitals) :..............................................

(IV) National Identity Card Number :.........................

(V) Telephone Number (Mobile) :.........................

(VI) Telephone Number (Fixed) :.........................

(VII) Gender :.........................

(VIII) Date of Birth :.........................

(IX) Age as at closing date of the application :...........

(X) Marital Status :.........................

(3) Educational Qualifications - G. C. E. (Ordinary Level) Examination :

Should pass minimum of 06 subjects at G. C. E. (Ordinary Level) Examination with at least 05 credits in one & same sitting. It is compulsory to process credit passes for Sinhala/ Tamil Language, English and a Distinction Pass for Mathematics.

Year :―――――  Index Number :―――――

| | | | |
|---|---|---|---|
| 1 | ――――― | Grade | ――――― |
| 2 | ――――― | Grade | ――――― |
| 3 | ――――― | Grade | ――――― |
| 4 | ――――― | Grade | ――――― |
| 5 | ――――― | Grade | ――――― |
| 6 | ――――― | Grade | ――――― |
| 7 | ――――― | Grade | ――――― |
| 8 | ――――― | Grade | ――――― |
| 9 | ――――― | Grade | ――――― |
| 10 | ――――― | Grade | ――――― |

(4) Educational Qualifications - G. C. E. (Advanced Level) Examination :

03 Simple passes at G. C. E. (Advanced Level) Examination in one & same sitting (Excluding General English)

Year :―――――  Index Number :―――――

| | | | |
|---|---|---|---|
| 1 | ――――― | Grade | ――――― |
| 2 | ――――― | Grade | ――――― |
| 3 | ――――― | Grade | ――――― |
| 4 | ――――― | Grade | ――――― |

(5) IT Literacy & Other Qualifications

Qualification Obtained :―――――
Institute awarded :―――――
Effective date of the certificate :―――――
main subject/ subjects followed :―――――

(6) Non - Related Referees

| | | |
|---|---|---|
| (i) | Name | |
| | Address | |
| | Contact No. | |
| (ii) | Name | |
| | Address | |
| | Contact No. | |

(7) Declaration of the Applicant

I, do hereby declare that the particulars furnished here are true according to my knowledge and belief. I am aware that I will be dismissed from the service if it is revealed that I am not eligible to be appointed to this post after being selected to the post. Any information mentioned herein not will be altered later. Further I Declare that I will be subject

to the rules & regulations imposed by the Commissioner General of Examinations Pertaining to the conduct of the Examination and the issuance results.

Signature of the applicant :————.

Date :————.

(8) Attestation of signature of The applicant

I Certify that Mr./Mrs./Miss.......................................... Submitting this application is personally known to me and he/she placed his/her signature before me on ................... ..................

Signature of the officer attesting the signature :————.
Date :————.
Full name of the attesting officer :————.
Post and Address (Confirm with the seal) :————.

(9) Recommendation of the Head of Department. (Only for the applicants in Public Service)

I hereby Certify that Mr./Mrs./Miss. ........................... .............. who is submitting this application is serving in a permanent and pensionable post in this department, he/she has satisfied the relevant qualifications for applying for this post as per this Gazette Notification and that he/she could be released from his/her present post, if selected for the position.

————,
Signature of the Head
of the Department.

Date :————.

Name of the Head of the Department :————.

Designation :————.

Address :————. (Place the Official Stamp)

12 - 351

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றும் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால்செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***- *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

**அட்டவணை - 2021**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 03.12.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.11.2021 |
| | | வெள்ளி | 10.12.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.11.2021 |
| | | வெள்ளி | 17.12.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.12.2021 |
| | | வெள்ளி | 24.12.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.12.2021 |
| | | வெள்ளி | 31.12.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.12.2021 |

**அட்டவணை - 2022**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 07.01.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.12.2021 |
| | | வியாழன் | 13.01.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.12.2021 |
| | | வெள்ளி | 21.01.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.01.2022 |
| | | வெள்ளி | 28.01.2022 | .. | நண்பகல் 12 | வியாழன் | 13.01.2022 |
| **பெப்புருவரி** | .. | வியாழன் | 03.02.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.01.2022 |
| | | வெள்ளி | 11.02.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.01.2022 |
| | | வெள்ளி | 18.02.2022 | .. | நண்பகல் 12 | வியாழன் | 03.02.2022 |
| | | வெள்ளி | 25.02.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.02.2022 |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*